விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 103 வள்ளுவர் ஆண்டு 2057 பங்குனி 18 புதன்கிழமை (01.04.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### மின் கட்டண உயர்வின் எதிரொலி

# உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு!

## மக்களுக்கு நெருக்கடிக்கு மேல் நெருக்கடி

(கொழும்பு)

மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதையடுத்து உணவுப் பொருட்களின் விலைகள் கணிசமானளவு அதிகரித்துள்ளது. இதனால் நுகர்வோர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் மயங்கி விழுந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மாமியாரின் மரணச் சடங்கிற்கு ஜேர்மனியில் இருந்து யாழ்.வந்த மருமகன் மயங்கி விழுந்து

15ஆம் பக்கம் பார்க்க

## பருத்தித்துறை கடற்கரையில் சடலம் மீட்பு

(கரணவாய்)

பருத்தித்துறை வியாபாரிமூலை கடற்கரையில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்று (31) மீட்கப்பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க

### இன்று மாத்திரம்

## அனைத்து வாகனங்களுக்கும் எரிபொருளைப் பெற அனுமதி

(யாழ்ப்பாணம்)

இன்று மாத்திரம் வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கம் ஒற்றை அல்லது இரட்டை எண்களாகக் கொண்ட அனைத்து வாகனங்களுக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளைப்பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர்

15ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவு புதைகுழி வழக்கு

### ஜூலை 28ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு புதைகுழி வழக்கு மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் ஜூலை 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் அனீபா ரஜீவ் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25 மற்றும் 26 ஆகிய நாட்களில் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் பாரிய மனிதப்

02ஆம் பக்கம் பார்க்க

## உலகளாவிய எரிசக்தி நெருக்கடி நீண்ட காலத்துக்குத் தொடரும்



### ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை

(பிரெஸல்ஸ்)

ஈரான் போர் காரணமாக உலகளாவிய எரிசக்தி சந்தையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் நீண்ட காலத்திற்கு நீடிக்கக்கூடும் என்பதால், அதற்குத் தயாராக இருக்குமாறு ஐரோப்பிய நாடுகளை ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது.

அமெரிக்கா - இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையேயான போர்

02ஆம் பக்கம் பார்க்க

## உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

(கொழும்பு)

2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று இரவு வெளியாகியுள்ளது.

பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk மற்றும் www.results.exams.gov.lk என்ற இணையத் தளங்களில் பெறுபேறுகளை பார்வையிட முடியும்.

மேலும் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக ஏதேனும் மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால் பரீட்சைத்

15ஆம் பக்கம் பார்க்க

## பெண்களுக்கு நீதி கோரி நல்லூரில் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

## இணுவிலில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் குடும்பஸ்தர் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் சுதுமலையைச்

15ஆம் பக்கம் பார்க்க

## 25 இந்திய மீனவர்கள் நிபந்தனையின்றி விடுதலை

### 12 பேருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த 25 இந்திய மீனவர்கள் மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை 12 இந்திய மீனவர்களின் விளக்கமறியல்

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு வேப்பந்திடல் முத்துமாரிக்கு இன்று கும்பாபிசேகம்



(மண்டைதீவு)

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்மனின் புனருத்தாரண பஞ்சதள இராஜ கோபுர நவகுண்ட பட்ஷ மகா கும்பாபிசேகம் இன்று முதலாம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.47 மணி தொடக்கம் 11.16 மணி வரையான சுபநேரத்தில் நடைபெறும்.

தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிசேகம் இடம்பெறும்.(ந)

# தலைமன்னாரில் 500 இற்கும் மேற்பட்ட பனை மரங்கள் எரிந்து நாசம்

தலைமன்னார் பருத்திப் பண்ணை கிராமத்திற்கு அருகில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட பனை மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

பனை மரத் தோப்பில் ஏற்பட்ட தீ விபத்தினால் குறித்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

பொலிஸார், இராணுவத்தினர், கடற்படையினர், அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், தீயணைப்புப் படையினர் மற்றும் கிராம மக்கள் இணைந்து தீயைக் கட்டுப் பாட் டுக்குள் கொண்டுவந்துள்ளனர். (ம-7,285)



# கைலாச பிள்ளையாருக்கு மகா கும்பாபிசேகம்

யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கை ஆரியச்சக்கரவர்த்தியினால் ஸ்தாபிக்கப்பட்ட நல்லூர் இராஜதானிக் கோவிலான ஸ்ரீ கைலாச பிள்ளையார் ஆலய மகாகும்பாபிசேகம் சுமார் 25 ஆண்டுகளின் பின் பங்குனி உத்தர நன்நாளான இன்று புதன் கிழமை சிறப்புற நடைபெறவுள்ளது.

அதன்பிரகாரம் காலை 4.30 மணி முதல் சதுர்வேத பாராயணம், விக்னேஸ்வர பூசையுடன் கும்பாபிசேகக் கிரியைகள் ஆரம்பமாகி மஹாபூர்ணாகுதி சமர்ப்பணம் இடம்பெற்று காலை 9.00 மணிக்கு சர்வமங்கள வாத்தியங்கள் முழங்க பிரதான கும்பங்கள் வீதிப் பிரதட்சிணமும் காலை 9.30 மணிக்கு கோபுர கலச அபிசேகமும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து உத்தர நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் விட்டி கரணமும் குரு ஹோரையும் கூடிய காலை 9.50 மணிமுதல் 11.00 மணிக்குள் வரும் ரிஷபலக்ன சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீகைலாசநாத பிள்ளையாருக்கும் ஸ்ரீ கைலைநாயகி சமேத ஸ்ரீ கைலாசநாதருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மகாகும்பாபிசேகம் சிறப்புற இடம்பெறவுள்ளது. (ம-7)

## பெண்களைக் கடத்தி கிணற்றில் வீசிய கொடூரம்

# குற்றவாளிகளை அடையாளம் காட்டிய கிணற்றில் வீசப்பட்டு உயிர் தப்பிய பெண்

மட்டக்களப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய, மயக்க மருந்து கொடுத்து பெண்கள் கடத்தப்பட்டு நகைகள் கொள்ளையிடப்பட்டு கிணறுகளில் வீசப்பட்ட விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் அடையாள அணி வகுப்புக்குட்படுத்தப்பட்டனர்.

மூடிய அறைக்குள் சாட்சியான கிணற்றிலிருந்து உயிருடன் மீட்கப்பட்ட பெண்ணின் முன்னிலையில் அடையாள அணி வகுப்பு நடாத்தப்பட்டது.

இதன்போது முதலாவது அடையாள அணிவகுப்பில் முதலாம், இரண்டாம் சந்தேக நபர்கள் அடையாளம் காணப் பட்டதுடன் இரண்டாவது அடையாள அணிவகுப்பில் மூன்றாவது நபர் அடையாளம் காட்டப்பட்டுள்ளார்.

இதேவேளை நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பிலிருந்து சென்ற கிழக்கு மாகாண பெரும் குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெய்வநாயகம் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கொழும்பு, வத்தளை பகுதியில் வைத்து மயக்க மருந்துகளை விநியோகம் செய்த நபரைக் கைது செய்திருந்தனர்.

விசாரணையின் பின்னர் கொக்கட்டிச்சோலை பொலிஸாரினால் நேற்று மாலை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ.தர்சினி முன்னிலையில் ஏழாவது சந்தேக நபருடன் முதலாவது சந்தேக நபரும் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது கொக்கட்டிச்சோலை பொலிஸார் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக ஏழாவது சந்தேக நபரை எதிர்வரும் 02ஆம் திகதி வரையில் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்வதற்கு அனுமதியளித்தார். (ம-7)

## மண்டைதீவு..

படுகொலை நிகழ்த்தப்பட்டது. இதன்போது 80 இற்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் காணாமலாக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 45 இற்கும் அதிகமான உடலங்கள் மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருப்பதுடன் அதற்கான வாமும் சாட்சியங்கள் உறுதியாகவும் இருக்கின்றன. அதேபோன்று அதற்கு அயலில் உள்ள பாடசாலை கிணறு ஒன்றுக்குள்ளும் உடலங்கள் இருக்கின்றன.

எனவே குறித்த கிணற்றை அகழ்ந்து உடலங்களை வெளிக்கொணர்ந்து உண்மைகள் வெளி உலகுக்கு வெளிக்கொணரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த செப்ரெம்பர் மாதம் தனது மகனை பறிகொடுத்த 81 வயதுடைய ஸ்ரிபன் மரில்டா ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை குறித்த வழக்கு மன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பொலிஸார் சில சமர்ப்பணங்கள் செய்த நிலையில் மேலதிக அறிக்கைகளை சமர்ப்பிக்க உத்தரவிட்ட மன்று வழக்கினை எதிர்வரும் ஜூலை 28ஆம் திகதிக்கு தவணையிட்டுள்ளது.

நேற்றைய வழக்கு விசாரணைகளின் போது, காணாமல் போனோர் அலுவலகத்தின் சட்டத்தரணி பூர்ணி மரியநாயகம் மற்றும் அதன் பிராந்திய இணைப்பாளர் த.செல்வக்குமார், ஆகியோருடன் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் வேலணைப் பிரதேச சபையின் உறுப்பினரும் தீவக முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான சுவாமிநாதன் பிரகலாதன் ஆகியோரும் மன்றில் முன்னிலையாகி இருந்தனர். (ம-7,33)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் ஒட்டுமடம் காரைநகர் வீதியில் 38 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- யாழ். மானிப்பாய் வீதி ஆறுகால்மடச் சந்தி 1 ஆம் ஒழுங்கை
- யாழ். மாநகரசபை எல்லைக்குள்
- ஒரு பரப்பின் விலை முன் பகுதி 12 இலட்சம் பின் பகுதி 10 இலட்சம்
- 1 ½ பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ். பஸ் நிலையம் 1 ½ Km தூரம்
- ஒட்டுமடச் சந்தி 300m
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- காரைநகர் வீதியிலிருந்து இரண்டாம் காணி

தொடர்புகளுக்கு :

076 990 3039, 077 468 3354

(2198)


## உலகளாவிய...

தொடங்கியதிலிருந்து ஐரோப்பாவில் எரிவாயு விலைகள் 70 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றிய எரிசக்தி ஆணையர் டான் ஜார்ஜென்சன் அமைச்சர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், "எரிசக்தி விநியோகத் தடையை எதிர்கொள்ள நாடுகள் முன்கூட்டியே திட்டமிட வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால் ஐரோப்பாவிற்கான மசகு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விநியோகம் நேரடியாகப் பாதிக்கப்படவில்லை என்றாலும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களான "ஜெட் எரிபொருள்" மற்றும் டீசல் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்படக்கூடும்.

ஐரோப்பா தனது விமான எரிபொருள் தேவையில் சுமார் 15 சதவீதத்தை மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கிறது.

ஹோர்முஸ் நீரிணை மூடப்படுவதற்கு முன்பு அங்கிருந்து புறப்பட்ட கடைசி எரிபொருள் கப்பல்கள் ஏப்ரல் 10 ஆம் திகதியளவில் ஐரோப்பாவை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பிறகு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதால் விமான எரிபொருள் விலைகள் கடுமையாக உயரக்கூடும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்த நெருக்கடியைச் சமாளிக்க ஐரோப்பிய நாடுகள் தங்களின் சுத்திகரிப்பு நிலையங்களில் அவசரமற்ற பராமரிப்புப் பணிகளைத் தள்ளிவைக்குமாறும் உற்பத்தியைக் குறைக்க வேண்டாமென்றும் ஜார்ஜென்சன் பரிந்துரைத்துள்ளார்.

ஐரோப்பாவிடம் சுமார் மூன்று மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் இருப்பு இருந்தாலும் சில குறிப்பிட்ட பகுதிகளில் தட்டுப்பாடு மற்றும் விலை ஏற்ற இறக்கங்கள் தவிர்க்க முடியாதவை என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ARANA JEWELLERY

நம்பிக்கை | நாணயம் | கைராசி என்றென்றும் உங்கள்...

# ஆரணா ஜுவல்லரி

# Arana Jewellery



செல்வத்தைப் பெருக்கி சௌபாக்கியத்தை வரமாக்கும்
**அஷ்ய திருதியை** எனும் நன்நாளைக் கொண்டாட உங்களை
அன்போடு அழைக்கின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| காலை முகூர்த்தம் | : 10.49 மு.ப - 12.10 பி.ப | ஏப்ரல் 19 |
| பிற்பகல் முகூர்த்தம் | : 1.42 பி.ப - 3.14 பி.ப | ஏப்ரல் 19 |
| மாலை முகூர்த்தம் | : 6.19 பி.ப - 10.42 பி.ப | ஏப்ரல் 19 |
| இரவு முகூர்த்தம் | : 1.37 மு.ப - 3.05 மு.ப | ஏப்ரல் 20 |
| அதிகாலை முகூர்த்தம் | : 4.33 மு.ப - 6.00 மு.ப | ஏப்ரல் 20 |

அட்ஷய திருதியை 19.04.2026, 20.04.2026 நன்னாளில்
**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கும்**
**3 அதிஷ்டசாலிகளுக்கு தங்க நாணயம்** மற்றும்

அத்தினத்தில் கொள்வனவு செய்யும்
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்



முற்பதிவுகளுக்கு முந்துங்கள்!

**அட்ஷய திருதியை**
முன்னிட்டு எம்மிடம் கொள்வனவு
செய்யும் தங்க நகைகளுக்கு
**விசேட விலைக்கழிவு** உண்டு

(C-5305)

இல.91, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Arana Jewellery

021 222 3732 | 021 222 4266 | 077 862 4745



# Vani Tex

# வாணி ரெக்ஸ்



வாடிக்கையாளர்களே!

**எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு**
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய
தெரிவுகளுடன் அனைத்து விதமான ஆடைகளையும்

**01.04.2026 - 14.04.2026 வரை**

**10% - 30%** வீதம் வரை விசேட விலைக்கழிவில்
மனதிற்குப் பிடித்த **Trending** ஆன ஆடைகளை
பெற்றுக் கொள்ளலாம்.

- பெண்களுக்கான சாறி, சல்வார்கள், லெகங்கா, பட்டுப் பாவடைகள், டொப் வகைகள், பார்ட்டி கவுண், மொடன் சட்டைகள்
- சிறுவர்களுக்கான அனைத்து வகையான ஆடை வகைகள்
- ஆண்களுக்கான ஆடை வகைகள்

அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட வாரீர்...

(C-5304)

இல.81, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

021 222 5578 | 021 222 9286 | 0777 488 093


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## சென்னை சுப்பர் கிங்ஸை 127 ஓட்டங்களுக்கு சுருட்டிய

## ராஜஸ்தான் றோயல்ஸ் 8 விக்கெட்டுகளால் அமோக வெற்றி

**குவாஹாட்டி, பர்சாபரா கிரிக்கெட் விளையாட்டரங்கில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஐ.பி.எல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸை 127 ஓட்டங்களுக்கு சுருட்டிய ராஜஸ்தான் றோயல்ஸ் 7.5 ஓவர்கள் மீதம் இருக்க 8 விக்கெட்களால் மிக இலகுவாக வெற்றியீட்டியது.**



முன்னாள் சென்னை வீரர் ரவிந்த்ர ஜடேஜா, ஜொவ்ரா ஆச்சர், நந்த்ரே பேர்கர் ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சுகளும் வைபவ் சூரியவன்ஷியின் அதிரடி அரைச் சதமும் ராஜஸ்தான் றோயல்ஸின் வெற்றியில் பிரதான பங்காற்றின.

அப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட சென்னை சுப்பர் கிங்ஸ், 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் இரண்டு தினங்களில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்திய ஐ.பி.எல் போட்டிகளில் 200 ஓட்டங்களுக்கு மேல் குவிக்கப்பட்டதுடன் இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடிய அணிகள் இலகுவாக வெற்றி பெற்றிருந்தன.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியிலிருந்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு மாற்றலான ரி-20 உலகக் கிண்ண நாயகன் சஞ்சு செம்சன் 6 ஓட்டங்களுடன் 2ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் ஆட்டம் இழந்தார். அதன் பின்னர் அடுத்தடுத்த விக்கெட்டுகள் சரிந்தன.

அணித் தலைவர் ருத்துராஜ் கய்க்வாட் (6), அயுஷ் மஹாத்ரே (0), மெத்யூ ஷோர்ட் (2) ஆகிய மூவரும் விரைவாக ஆட்டம் இழந்தனர்.

பவர் ப்ளே நிறைவில் சென்னை சுப்பர் கிங்ஸ் 4 விக்கெட்களை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தப் போட்டியில் சர்பராஸ் கான் (17), கார்த்திக் ஷர்மா (18) ஆகிய இருவரும் சென்னை சார்பாக இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்ற முதல் வீரர்களாகினர். ஆனால், அவர்களால் நீடித்திருக்க முடியாமல் போனது.

தொடர்ந்து ஷிவம் டுபே (6), நூர் அஹ்மத் (1), மெட் ஹென்றி (5) ஆகியோரும் ஒற்றை இலக்க எண்ணிக்கைகளுடன் ஆட்டம் இழந்தனர்.

ஜெமி ஓவர்ட்டன் துணிச்சலுடன் துடுப்பெடுத்தாடி 43 ஓட்டங்களைப் பெற்றதுடன் கடைசி விக்கெட்டில் அனுஷ°ல் கம்போஜ°டன் 33 ஓட்டங்களைப் பகிர்ந்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு சுமாரான மொத்த எண்ணிக்கையைப் பெற உதவினார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் கடைசி விக்கெட் இணைப்பாட்டமே சிறந்த இணைப்பாட்டமாக அமைந்தது. கம்போஜ் 7 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ரவிந்த்ர ஜடேஜா 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் ஜொவ்ரா ஆச்சர் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் நந்த்ரே பேர்கர் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

127 ஓட்டங்கள் என்ற சுமாரான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் 12.1 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்று அமோக வெற்றி யீட்டியது.

மூன்று தினங்களுக்கு முன்னர் தனது 15ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய இளம் அதிரடி நட் சத்திரம் வைபவ் சூரியவன்ஷி 17 பந்துகளில் 4 பவுண்டறிகள், 5 சிக்சர்களுடன் 2 ஓட்டங்களைக் குவித்தார்.

சூரியவன்ஷியும் யஷஸ்வி ஜய்ஸ்வாலும் 38 பந்துகளில் 75 ஓட்டங்களைப் பகிர்ந்து, சிறப்பான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

சூரியவன்ஷி ஆட்டம் இழந்த பின்னர் களம் புகுந்த த்ருவ் ஜ°ரெல் நீண்ட நேரம் தாக்குப்பிடிக்கவில்லை. அவர் 18 ஓட்டங்களை மாத்திரம் பெற்று வெளியேறினார். (99 - 2 விக்.)

வழமைக்கு மாறாக நிதானத்துடன் துடுப்பெடுத்தாடிய யஷஸ்வி ஜய்ஸ்வால் 36 பந்துகளில் 38 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழக்காதிருந்தார். அணித் தலைவர் ரெயான் பராங் ஆட்டம் இழக்காமல் 14 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் அன்ஷ°ல் கம்போஜ் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். (நி)

### பாகிஸ்தான் பிரீமியர் லீக்

## பந்தை சேதப்படுத்திய பகார் சமான்

## தடை விதிக்க வாய்ப்பு



பாகிஸ்தான் பிரீமியர் லீக் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற போட் டியில் கராச்சி கிங்ஸ் - லாகூர் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் லாகூர் கிங்ஸ் அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கு இடையிலான பரபரப்பான ஆட்டத்தின் போது, லாகூர் வீரர் பகார் சமான் பந்தைச் சேதப் படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

லாகூர் கலாண்டர்ஸ் மற்றும் கராச்சி கிங்ஸ் அணிகளுக்கு இடையிலான விறுவிறுப்பான போட்டியின் போது இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. கராச்சி அணி வெற்றி பெற கடைசி ஓவரில் 14 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அந்தச் சமயத்தில், மைதானத்தில் இருந்த கமரா காட்சிகளில் பக்கர் ஜமான், கப்டன் ஷாஹீன் அப்ரிடி மற்றும் ஹாரிஸ் ரவுப் ஆகியோர் பந்தை வேகமாக மாற்றிக் கொள்வது போன்ற காட்சிகள் பதிவாகின.

இதைக் கவனித்த கள நடுவர் பைசல் அப்ரிடி, உடனடியாகப் பந்தை வாங்கி ஆய்வு செய்தார். மற்றொரு நடுவர் ஷர்புத் தௌலாவுடன் கலந்தாலோசித்த பிறகு, லாகூர் அணி பந்தின் தன்மையை மாற்ற முயன்றதை உறுதி செய்தனர். இதற்கான தண்டனையாக கராச்சி கிங்ஸ் அணிக்கு 5 பெனால்டி ஓட்டங்கள் வழங்கப்பட்டன.

இந்த விவகாரத்தில் லெவல்-3 குற்றச்சாட்டின்கீழ் பக்கர் ஜமான் மீது பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பாக மேட்ச் ரெப்ரி ரோஷன் மகாநாம தலைமையில் விசாரணை நடத்தப்பட உள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவருக்கு ஒன்று அல்லது இரண்டு போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்படலாம்.


அடுத்த 48 மணி நேரத்திற்குள் இந்த விவகாரத்தில் இறுதித் தீர்ப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஐ.எம்.எப் இன் அனுமதி கிடைக்காவிட்டால்

# எரிபொருள் விலையில் பாரிய மாற்றம் ஏற்படலாம்



**(கொழும்பு)**

**சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி கிடைக்காவிட்டால், தற்போது அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள மானியத் தொகை நேரடியாக எரிபொருள் விலையுடன் சேர்க்கப்பட வேண்டிய நிலை ஏற்படும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

டீசல் மற்றும் பெற்றோலுக்கு தற்போது நடைமுறையிலுள்ள மானிய முறைமையின் கீழ், ஒரு லீற்றர் டீசலுக்கு 100 ரூபாயையும், ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 20 ரூபாயையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரி பொருள் விலையேற்றத்திலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் மாதம் ஒன்றுக்கு சுமார் 20 பில்லியன் ரூபாயை செலவிட்டு வருகிறது.

எரிபொருள் இறக்குமதிக்கான முழுச் செலவையும் அரசாங்கம் ஏற்க நேரிட்டால், அது ஆண்டுக்கு சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் மேலதிக செலவை ஏற்படுத்தும்.

இது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் அழுத்தத்தை உருவாக்கும். எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி வரை இந்த மானிய முறையைத் தொடர அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

மே மாதத்திற்குப் பிறகும் இதனை நீடிப்பதா என்பது குறித்து, மத்திய கிழக்கில் நிலவும் சூழல் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இறுதி நிலைப்பாடு ஆகிய வற்றைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

ஒருவேளை சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி கிடைக்காவிட்டால், தற்போது அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள மானியத் தொகை நேரடியாக எரிபொருள் விலையுடன் சேர்க்கப்பட வேண்டிய நிலை ஏற்படும் என குறிப்பிட்டுள்ளார்.

எனவே இவ்வாறு சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி கிடைக்காவிட்டால் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள மானியத் தொகை நேரடியாக எரிபொருள் விலையுடன் இணைக்கப்படுவதால் மீண்டும் எரிபொருள் விலை பாரியளவில் அதிகரிக்கலாமென பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

## உலகளாவிய எரிசக்தி நெருக்கடி

## தமக்கான எரிபொருள் ஒதுக்கீட்டினை குறைத்த அமைச்சர்கள்



(கொழும்பு)

அமைச்சரவை அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் தாமாக முன் வந்து தமது எரிபொருள் ஒதுக்கீடுகளை மூன்றில் ஒரு பங்கிற்கும் மேலாகக் குறைத்துள்ளதாக, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தனா அபேரத்ன தெரிவித்தார்.

தற்போது நிலவிவரும் எரிசக்தி நெருக்கடிக்கு மத்தியில், பொதுமக்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமையும் வகையில், அனைத்து அமைச்சர்களும் இணைந்து இந்த முடிவை எட்டியதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த முடிவுக்கு இணங்க, அமைச்சகச் செயலாளர்கள் உள்ளிட்ட மூத்த அதிகாரிகளும் தங்களின் எரிபொருள் ஒதுக்கீட்டைக் கணிசமாகக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

உலகளாவிய எரிசக்தி நெருக்கடி மற்றும் நிலவும் வறண்ட வானிலை ஆகிய வற்றை எதிர் கொண்டு, அனைத்து அரசு நிறுவனங்களும், உள்ளூராட்சி அமைப்புகளும், பொது மக்களும் நீர் மற்றும் மின்சாரத்தைச் சேமிக்கப் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று அமைச்சர் மேலும் வலியுறுத்தினார். (நி)

## நாடு முழுவதும் நிலவும் கடும் வெப்பம்

## 10.30 - 3.30 வரை வெளியே செல்வதைத் தவிர்க்கவும்

### சுகாதாரத்துறை அறிவுறுத்து

(கொழும்பு)

நாடு முழுவதும் நிலவும் கடுமையான வெப்பமான வானிலை காரணமாக, வெப்பம் தொடர்பான நோய்கள் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது.

இதனைத் தவிர்க்கும் பொருட்டு, பாடசாலைகள் மற்றும் பணியிடங்களில் அன்றாடச் செயற்பாடுகளில் மாற்றங்களை மேற்கொள்ளுமாறு சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

சிறுவர்கள், முதியவர்கள் மற்றும் நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த வெப்பமான காலநிலையில் நீரிழப்பு, வெப்பத் தாக்கம் மற்றும் தோல் பாதிப்புகளுக்கு உள்ளாகும் அதிக அபாயத்தைக் கொண்டுள்ளனர்..

ஆகவே பாடசாலைகளில் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகளை வெயில் அதிகமாக இருக்கும் நேரங்களில் தவிர்த்து, அதிகாலை அல்லது மாலை வேளைகளில் நடத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பணியிடங்களில் வெளியில் வேலை செய்பவர்களின் நலன் கருதி, பணிகளை முற்பகல் 10.30 மணிக்கும் முன்னதாக அல்லது பிற்பகல் 3.30 மணிக்குப் பின்னரோ மாற்றியமைக்க வேண்டும். நண்பகல் வேளையில் நேரடி சூரிய ஒளியில் வேலை செய்வதைத் தவிர்க்க வேண்டும், ஜன்னல் மற்றும் கதவுகளைத் திறந்து வைத்து காற்றோட்டத்தை உறுதிப்படுத்த வேண்டும் அல்லது குளிர்ச்சி தரும் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தினமும் குறைந்தது 2.5 லீற்றர் நீர் அருந்த வேண்டும், சர்க்கரை கலந்த பானங்கள், கார்பனேற்றப்பட்ட குளிர்பானங்கள் மற்றும் மதுபானங்களைத் தவிர்க்க வேண்டும்.

மேலும் உடலில் நீர்ச்சத்து உள்ளதா என்பதை சிறுநீரின் நிறத்தைக் கொண்டு அவ்வப்போது அவதானிக்க வேண்டும். வெளியில் செல்லும் போது குடை, தொப்பி அல்லது முழு உடலையும் மறைக்கும் வகையிலான ஆடைகளைப் பயன்படுத்த வேண்டும்.

வாகன சாரதிகள் வெயிலில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களுக்குள் ஏறுவதற்கு முன்னர், ஜன்னல்களைத் திறந்து உட்புற வெப்பத்தைக் குறைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)


**யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லி கல்லூரி)**

**பழைய மாணவர் சங்க பொதுச் சபைக் கூட்டம்**

இடம் :- கல்லூரி பிரதான மண்டபம்
காலம் :- 19.04.2026 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- காலை 9.00 மணி
தலைமை :- திரு.சூடாமணி அகிலன் பழைய மாணவர் சங்கத் தலைவர்

மேற்படி பொதுச்சபைக்கூட்டத்தில் ஆயுட்கால அங்கத்தவர்கள் அனைவரையும் புதிதாக இணைய விரும்பும் பழைய மாணவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரேரணைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 07.04.2026 (செவ்வாய்க்கிழமை) இற்கு முன்பதாகப் பின்வரும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

செயலாளர், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம், 433, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

திரு.சூ.அகிலன் தலைவர்:- 077 249 7266 (7172)
திரு.சி.லோகதாஸ் செயலாளர்:- 077 732 7271


## எரிபொருளுடன் நாளை இலங்கை வரும் கப்பல்



(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, நாளை வியாழக்கிழமை 32 ஆயிரம் லீற்றர் எரி பொருளை ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடையவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அதன் மேலாண் பணிப்பாளர் மயூரு நெத்திகுமார தெரிவிக்கையில், இந்த கப்பலில் 32 ஆயிரம் லீற்றர் டீசலும், 8 ஆயிரம் மெட்ரிக் தொன் ஜெட் ஏ-1 வானூர்தி எரிபொருளும் கொண்டு வரப்படுவதாகக் குறிப்பிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத கடற்றொழிலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

## ரவிகரன் எம்.பி

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு உட்பட வடக்கு, கிழக்கு கடற்பரப்புக்களில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் இத்தகைய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த கடற்றொழில் அமைச்சர் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.**

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளுக்கெதிரான கவனயீர்ப்பு நடவடிக்கையில் பங்கேற்று, கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரமல்ல, வடக்கு கிழக்கிலுள்ள அனைத்துக் கடற்பரப்புக்களையும் ஆக்கிரமித்துள்ளன. இதனால் எமது அப்பாவி மீனவர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பில் பல தடவைகள் உரிய தரப்பினர்களது கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதுடன், பாராளுமன்றிலும் இந்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தியிருக்கின்றோம்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கொக்கிளாய் தொடக்கம், பேப்பாரப்பிட்டி வரையான 74 கிலோமீற்றர் தூரமான கடற்பரப்பில் பல்லாயிரக்கணக்கான எமது மீனவர்கள் கடற்றொழில் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் தற்போது அதிகரித்துள்ளதால் கடற்றொழிலை மாத்திரம் வாழ்வாதரமாகக் கொண்ட அந்த பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது.

கடற்றொழில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்ற எமது அப்பாவி மீனவர்கள் எரிபொருள் நெருக்கடி நிலைக்கு மத்தியில் கடுமையான உடலுழைப்புடன் கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொண்டு வெறுமையான வலைகளுடனும், படகுகளுடனும் கரைதிரும்புகின்ற அவலங்களே இங்கு இடம்பெறுகின்றன. சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்துள்ளமையினாலேயே எமது மீனவர்கள் இவ்வாறு வெறுமையான படகுகளுடன் கரை திரும்பவேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்ற விதமான சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்தி, மீனவர்களது வாழ்வாதாரம் செழிப்பதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்துமாறு உரியவர்களைக் கோருகின்றோம் எனத் தெரிவித்தார். (8)

# மண்கும்பான் வெள்ளைப்புற்றடி விநாயகருக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மண்கும்பான் திருவருள்மிகு மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று 1 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் உற்சவங்கள் நடைபெறும்.

இவ் உற்சவங்களில் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் 15 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (8)



தும்பளை மேற்கு விவேகானந்தா சனசமூக நிலையத்தின் 77ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு தும்பளை விவேகானந்தா விளையாட்டுக் கழகம், தும்பளை மேற்கு சனசமூக நிலையத்துடன் இணைந்து நடத்திய ஊரக விளையாட்டு விழா அண்மையில் கழக மைதானத்தில் நடைபெற்றது. (படம்:மகாலிங்கம்)

# மரக்கிளை முறிந்து விழுந்ததில் முச்சக்கரவண்டி சேதம்

(கரணவாய்)

மரக்கிளை முறிந்து விழுந்ததில் முச்சக்கரவண்டி ஒன்று சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மந்திகையில் உள்ள ஆலயம் ஒன்றிற்கு சென்ற முச்சக்கரவண்டி சாரதி: முச்சக்கரவண்டியை மரநிழலில் நிறுத்திவிட்டு இருந்த நிலையில் மரக்கிளை ஒன்று முறிந்து முச்சக்கரவண்டி மீது விழுந்துள்ளது.

இதனால் முச்சக்கரவண்டி சேதமடைந்துள்ளதுடன் தெய்வாதீனமாக சாரதிக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. (8-60)

## வடமராட்சி கிழக்கில் பேருந்து சேவை

(கரணவாய்)

பருத்தித்துறையிலிருந்து வடமராட்சிக் கிழக்கிற்கான மேலதிக பேருந்து சேவை கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் இடம்பெற்று வருகின்றது. மேற்படி வழித்தடங்கலில் முற்பகல் 10:30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து கேவில் நோக்கிப் புறப்படும் பருத்தித்துறை சாலையின் பேருந்து சேவையானது சாரதிகள் இன்மை காரணமாக பல வருடங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

தற்போது இ.போ.சபை பருத்தித்துறை சாலைக்கு ஐந்து மேலதிக சாரதிகள் கிடைக்கப்பெற்றதால் முற்பகல் 10:30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து கேவில் நோக்கி செல்லும் பேருந்து மீண்டும் பிற்பகல் 1:15 மணியளவில் மீண்டும் கேவிலில் இருந்து பருத்தித்துறை நோக்கி புறப்படும் எனவும், இச்சேவை தினமும் தொடர்ந்து இடம்பெறும் எனவும் இ.போ.சபையின் பருத்தித்துறை சாலையின் உதவி முகாமையாளர் பரராசசிங்கம் உதயனன் தெரிவித்தார்.(8-60)

# பிரஜாசக்தி ஊடாக உள்ளூராட்சி அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன

## வடமராட்சி வடக்கு ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(கரணவாய்)

பிரஜாசக்தி குழுவினூடாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சிமன்றங்களின் அதிகாரம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ந.திரிலிங்கநாதன் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜெ.ரஜீவன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பிரஜாசக்தி குழுவின் சிபார்சில் வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையை புறக்கணித்து அதன் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் பணிகளை முன்னெடுப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் யுகதீஸ் மற்றும் பருத்தித்துறை நகரசபை தவிசாளர் வி.டக்ளஸ் போல் ஆகியோர் தெரிவித்தனர்.

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ஜெ.ரஜீவன், பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா ஆகியோர் பிரஜாசக்தி மூலம் முன்னெடுக்கும் பணிகளை நியாயப்படுத்தி கருத்துகளை முன்வைத்திருந்தனர். இதனால் கூட்டத்தில் குழப்பமான நிலை ஏற்பட்டிருந்தது. (8-60)

## புதிய நிர்வாகத் தெரிவு

(கரணவாய்)

பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நவீன சந்தை கட்டடத்தொகுதியின் முதல் தளத்தில் உள்ள வர்த்தகர் சங்க அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை தலைவர் இ.ராஜேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இரா.மயூதரன் தலைவராகவும், ஸ்ரீ பிரகாஸ் செயலாளராகவும், த.ஆதித்தன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (8-60)

# தந்தை செல்வாவின் 128 ஆவது ஜனன தினம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 128 ஆவது ஜனன தினம் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு இலங்கை தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் மலர்மாலை அணிவித்ததைத் தொடர்ந்து, நிகழ்வில் கலந்து கொண்டவர்களால் நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச சபை

## 2026 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட, இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், என்பவற்றை 16.04.2026 தொடக்கம் 31.12.2026 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி- 01.04.2026 (செவ்வாய்க்கிழமை) முதல் 14.04.2026 வரை (மு.ப - 9.00மணி முதல் - பி.ப 3.00மணி வரை)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 15.04.2026 (பி.ப 02.00 மணி வரை)

கேள்வி திறக்கும் திகதி :- 15.04.2026 (புதன்கிழமை) பி.ப ‌C2.00 மணி

| தொ இல | சந்தைகளின் பெயர் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|---|
| | வேலணை துறையூர் மீன் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும் | | | | |
| 1 | கடை இல - 01 | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 28,050.00 |
| 2 | கடை இல - 02 | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 28,050.00 |
| 3 | கடை இல - 04 | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 25,607.00 |
| 4 | கடை இல - 05 | 2,000.00 | 2,400.00 | 5,000.00 | 27,271.00 |
| 5 | கடை இல - 06 | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 24,792.00 |
| 6 | கடை இல - 07 கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 26,634.00 |
| | வேலணை பொதுச்சந்தையும் (6ம் வட்டாரம்) சந்தையில் அமைந்துள்ள கடைகளும் | | | | |
| 7 | கடை இல - 01 | 2,000.00 | 1,500.00 | 5,000.00 | 24,792.00 |
| 8 | கடை இல - 02 | 2,000.00 | 1,500.00 | 5,000.00 | 24,792.00 |
| 9 | கடை இல - 04 சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | 2,500.00 | 5,000.00 | 14,068.00 |
| | புங்குடுதீவு முற்றவெளிச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும் | | | | |
| 10 | கடை இல - 05 சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | 850.00 | 5,000.00 | 41,296.00 |
| 11 | கடை இல - 08 | 2,000.00 | 1,500.00 | 5,000.00 | 32,725.00 |
| 12 | கடை இல - 09 ஆட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 29,042.00 |
| 13 | கடை இல - 10 கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 108,694.00 |

**நிபந்தனைகள்**

1) கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.

2) உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

3) கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ளும் போது மேலுள்ள அட்டவணைக்கு அமைவாக கேள்வி வைப்புப் பணம், படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும்.

4) கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை **"தவிசாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடிச் சந்தி, வேலணை"** எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் "** என்ற முகவரிக்கு 15.04.2026ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

5) தெரிவு செய்யப்படும் சித்திகர கேள்விதாரர்கள் மற்றும் தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடையின் சித்திகர கேள்விதாரர் ஆகியோர் சித்திகர தொகையின் 1/3 பகுதியினை சபையின் தலைமை அலுவலகத்தில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்

6) கடைகளுக்கு சபையினால் விதிக்கப்படும் இயைபுடைய மாத வாடகையினை கேள்வித் தொகையுடன் சேர்த்துச் செலுத்துதல் வேண்டும்.

7) கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

8) கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

9) உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

10) கேள்விகளை தகுந்த காரணங்களுடன் ஏற்றுக்கொள்வதற்கும் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ நிராகரிப்பதற்குமான முழு அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.

❖ **மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.**

❖ குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு உடன்பட வேண்டும் என்பதுடன் விதந்துரைக்கப்படாத விடயங்கள் தொடர்பில் சபையின் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

(C-5306)

**திரு.சி.அசோக்குமார்**
**தவிசாளர்,**
**வேலணை பிரதேச சபை.**

**திகதி:- 01.04.2026**

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக சட்ட விரோதமாக நாட்டிற்குள் கொண்டுவரப்படவிருந்த சுமார் 5.5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சந்தேகநபர் ஒருவரை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அதன்படி, இந்த கைது நடவடிக்கை நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளார். அதன்போதே, சந்தேகநபரின் பயணப் பையிலிருந்து 35,000 வெளிநாட்டு சிகரெட்டுகள், 2,000 நிக்கோட்டின் இரசாயனம் கொண்ட சிறிய பொதிகள் மற்றும் 50 மின்னணு சிகரெட்டுகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் காலி பகுதியில் வசிக்கும் 23 வயது தொழிலதிபர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# பெரமுன வேட்பாளரே அடுத்த ஜனாதிபதி

## என்கிறார் சாகர காரியவசம்

(கொழும்பு)

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் நிறுத்தப்படும் வேட்பாளரே நிச்சயம் வெற்றி பெற்று அடுத்த ஜனாதிபதியாவார்" என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய ஆட்சியின் கீழ் நாட்டில் ஜனநாயக உரிமைகள் படிப்படியாக இல்லாதொழிக்கப்பட்டு வருகின்றன. மக்கள் மீது அடக்கு முறைகள் ஏவிவிடப்படுகின்றன. இத்தகைய ஜனநாயக விரோதச் செயல்களுக்கு எதிராக மக்கள் ஒன்றிணைந்து அணிதிரள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

எதிரணிக்குரிய பொறுப்பை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தம்மால் முடிந்தவரை செம்மையாக நிறைவேற்றி வருகின்றது. தற்போதைய அரசைத் தேர்தல் மூலம் தோற்கடிப்பது எமக்குச் சவாலான விடயமே அல்ல.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையின் கீழ் களமிறக்கப்படும் வேட்பாளரே இந்த நாட்டின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என்பது உறுதி. அதற்கான மக்கள் பலம் இப்போதும் எங்களிடமே உள்ளது." என அவர் தெரிவித்தார். (நி)



பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் தேர்த்திருவிழா நேற்றையதினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக

# வரலாற்று சிறப்புமிக்க கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நா
# வருடாந்தப் பங்குனி உத்தரப் பொங்கல் விழாவின் சிறப்பு மல

சுமார் நானூறு வருடங்களுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட நாகதம்பிரான் ஆலயத்தில் பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கின்ற அரச மரத்தில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் பாம்புத் தெய்வம் ஒரு மானிடப் பெண்ணின் பிள்ளையாகப் பிறந்து தெய்வமாக மாறியதே வரலாறு.

அப்போதைய யாழ் மாவட்டம் இன்றைய கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்த கரைச்சிப் பதியில் புளியம்பொக்கணை கொழுந்துப்புலவு கிராமத்தில் வாழ்ந்த செல்வந்தர் குடும்பந்தான் நீதி நாயக முதலியார்-கமலம் தம்பதியர். இவர்களது வாழ்வில் பிள்ளைச் செல்வம் இல்லாமை பெரும் குறையாக இருந்தது. இதனால் சிவ பார்வதியை வேண்டி விரதம் இருந்து பல தர்ம காரியங்கள் செய்து வந்தனர்.



இதன் பயனாக இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. மூத்த பிள்ளைக்கு மாப்பாணமுதலி என்றும் இளையவனுக்கு வவுனிய முதலி என்றும் பெயர் சூட்டி அன்போடு வளர்த்து வந்தனர். காலம் செல்ல பெண்குழந்தை வேண்டி விரதம் இருந்து தர்ம காரியங்கள் செய்து வந்த போது தாய் கமலம் கருவுற்று பங்குனி மாதம் உத்தர நட்சத்திரம், பௌர்ணமித் திதியும் கூடிய நல்ல நாளில் ஒரு பாம்புக் குழந்தையையும், ஒரு பெண் குழந்தையையும் பெற்றெடுத்தார். பாம்புக் குழந்தையைக் கண்டு உற்றார் வெறுத்த போதும் தாயும், தந்தையும் இது சிவன் செயல் என்று எண்ணி பிள்ளையாக ஏற்று பாம்புக் குழந்தைக்கு தம்பிரான் என்று பெயர் சூட்டி பெண் குழந்தைக்கு வள்ளி நாச்சன் என்ற பெயரும் வைத்து வளர்த்து வந்தனர்.கல்வி அறிவுள்ளவர்களாகவும், நற்குணமுள்ளவர்களாகவும் பிள்ளைகள் வளர்ந்தனர். அதேபோல் பாம்புக் குழந்தையும் வளர்ந்தது. பிள்ளைகளின் வயதுக்கு ஏற்றபடி குல வழமைக்கு அமைவாக திருமணங்கள் முடித்து வைத்தனர். பாம்பு தம்பிரானும் திருமணம் செய்தது போல பாம்புகளுடன் கூடி வீட்டில் வாழ்ந்தது.இந் நிலையில் முதுமையடைந்த பெற்றோர் தங்களிடம் உள்ள காணி சொத்துக்கள் எல்லாவற்றையும் மூன்று பிள்ளைகளுக்கும் பகிர்ந்து சாதனம் எழுதினர்.

இதை அவதானித்த தம்பிரான் சர்ப்பம் கோபம் கொண்டு தனக்கும் பங்கு வேண்டும் என்பதை வெளிப்படுத்தியது.

இதை உணர்ந்த பெற்றோர் சொத்துக்களை நான்காகப் பகிர்ந்து சாதனம் எழுதிவைத்தனர்.

இதன்போது பாம்பு தன்னுடைய பங்கை தங்கையின் பங்குடன் சேர்த்து இதுவும் உனக்கே என்று உணர்த்தி நின்றது.

இதன் பின்பு பிள்ளைகள் மூவரும் தனித்தனி இல்லங்களில் வாழ்ந்து வரும் நிலையில் தம்பிரான் பாம்பும் மற்றைய பாம்புகளும் பெற்றோருடன் வாழ்ந்து வந்தன. ஒருநாள் அதிகாலை தாயார் கமலம் முற்றம் கூட்டிக் கொண்டிருந்தார். அவ்வேளை தம்பிரான் பாம்பும் மற்றைய பாம்பகளும் தாயாரின்-மேல் ஏறி அவரை கூட்டவிடாமல் தொந்தரவு செய்த போது கோபம் கொண்ட தாய் தொலைந்து போ என்று கூட்டு மாறினால் தட்டினார். அதன் போது தம்பிரான் மிகுந்த கோபம் கொண்டு தாயாரை கொத்துவதற்கு முனைந்தும் பெற்ற தாய் என்று எண்ணி கோபத்தை அடக்கிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறியது. அதே போல மற்றைய பாம்புகளும் அங்கிருந்து போய்விட்டன.

நித்திரை விட்டு எழுந்த தந்தையார் பாம்புக் குழந்தைகளை காணாமல் மனைவியிடம் விசாரித்துள்ளார். மனைவி நடந்தவற்றைக் கூறிய போது வேதனை கொண்ட தந்தையார் எல்லா இடமும் தேடிப் பார்த்தார். பாம்புகளைக் காணாத நிலையில் துயரத்துடன் சாய்ந்து அயர்ந்து விட்டார். அப்போது சிவபெருமான் அந்தணர் வடிவில் தோன்றி உனது பிள்ளைகள் கொக்காவில் காட்டு வழியாகச் சென்று புதூர் என்ற ஊரில் பாலை மரத்தடியில் இருக்கிறார்கள். நீ அங்கு சென்று அவர்களை அழைத்து வந்து கோயில் வைத்து வழிபாடு செய் என்று கூறி மறைந்து விட்டார்.

அதன்படி நீதி நாயக முதலியார், பிள்ளைகள், உறவினர் எல்லோருமாக புதூர் சென்று பூசை ஆராதனையுடன் பாம்புத் தெய்வத்தை அழைத்து வந்து புளியம்பொக்கணையில் பொருத்தமான இடத்தில் அரசமரத்தடியில் வைத்து கோயில் அமைத்து பால், பழம் வைத்து பூசை செய்து வழிபட்டு வந்தனர்.

இவ்வாறு பாம்புத் தெய்வம் பிறந்த தினமான பங்குனி மாதம் உத்தர நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் சேர்ந்த நாளுக்கு

நீர்த் தடாகத்தில் நீராடி அனுட்டானம் செய்து கொண்டு அ
முன்னிலையிலும் கழுவி அதனுள் வெள்ளைச் சீலை ஒ
பாடி தெய்வமே வேற்று மதத்தவர்கள் முன்னிலையில் வ

அந்தவேளையில் எதிர்பாராத வண்ணம் அந்தப்
நின்றவர்கள் எல்லோரும் கைகூப்பி நிற்க அந்த ஒ
வழிபட்டனர்.தொடர்ந்து பாம்பு மறைந்து விட அதிகாரி
பூசைகள் செய்து எந்தவித தடையும் இல்லாமல் ஆலயத்தி
என்று கூறிச் சென்றனர்.

அதன் பின்பு பூசகரும் தொண்டர்களும் நிகழ்வுக
நடத்திக்கொண்டிந்தனர். அந்த நேரத்தில் அங்கு வந்த
கொடுத்த ஐந்து தலை நாக பாம்பின் ஐம்பொன்னினா
தொகையையும் கொடுத்து வணங்கி விடைபெற்றுச் செ

இவ்வாறான வரலாற்றுச் சிறப்புக் கொண்ட நாகதம்
உள்ளவர்களே பூசகராக இருந்து நாகதம்பிரானின் நை
பாம்பு தாயுடன் கோவித்துக் கொண்டு போனது தொ
நாகதம்பிரான் ஆலயத்தின் திருக்கதவு மூடப்பட்டு தை

சிவனுக்கும், தம்பிரானுக்கும் தனி மூலாலயங்களு
மண்டபமும் அமையப்பெற்றுள்ளது. சிவனுக்கான ம
திருவிழாவும் நடைபெற்று வருகிறதுடன் பல்லாயிரம் அடி

வரலா
கலைக்கிளி மயில். வேலாயுதப்பிள்ளை,

மலர் வெளியீடு- ஆலய நிர்வாகம்

மலர் தயாரிப்பு- க.தே.


சிறி வெற்றிலைக்கடை

புளியம்பொக்கணை நாகதம்பிரான்
ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

- ஆலயத்திற்குத் தேவையான கும்பாபிஷேக பொருட்கள்
- மற்றும் சங்காபிஷேக பொருட்கள்
- நவன கும்ப அபிஷேக பொருட்கள்
- அந்தியேட்டி, சபண்டீ கிரியைகளுக்கான பொருட்கள்

மற்றும் ஏனைய கிரியைகளுக்கான பொருட்களை எம்மிடம் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

077 278 4730
சந்தை உட்புறம், கொடிகாமம்.
(C-5311)

புதிய கண்ணகை அம்மன் அரிசி ஆலை

புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
பல வருடங்களாக தரமான அரிசி வகைகளை வழங்கி வரும்
புதிய கண்ணகை அம்மன் அரிசி ஆலை.
(C-5310)
கரவெட்டித்திடல்,
புளியம்பொக்கணை.
உரிமையாளர் -ம.லம்போதரன்
077 239 5804

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின்
வருடாந்த பொங்கல் நிகழ்வு சிறப்புற வாழ்த்துகின்றோம்.

D.K. கார்த்திக் பசன்வேல்ட்

குழந்தைகளுக்கான அனைத்து
வகையான ஆடைகள் மற்றும்
ஆண், பெண்
பெரியவர்களுக்கான
ஆடைகளையும் சிறுவர்களுக்கான,
துவிச்சக்கரவண்டி
மற்றும் கவரிங் நகைகளை
ஒரே கூரையின் கீழ்
பெற்றிட எம்மிடம் வாருங்கள்.



கண்டாவளை
பிரதேச சுகாதார வைத்திய
அதிகாரி பணிமனை முன்பாக,
தருமபுரம்.
077 268 0656
(C-5307)

பல வருடங்களாக வாடிக்கையாளர்களின் மனங்களில் ப

மகிழன் களஞ்சியம்

புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல்
உற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
அனைத்து வகையான பால்மா பொருட்கள், குளிர்பான வகைகள் , பிஸ்கற்
வகைகள் மற்றும் பலசரக்கு பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள மகிழன் களஞ்சியம் (கிவா கடை)
Maji Travels & Tours- MTT
உங்கள் துரப்போக்குவரத்துக்கான அனைத்து வாகன வசதிகளை செய்து தருகிறோம்.
A35 வீதி,தருமபுரம். (C-5308) 076 583 53

தருமபுரத்தில் பல ஆண்டுகால வாடிக்கையாளர்களின்
மனங்களில் பதிந்த

RV பந்தல் சேவை
திருமண மண்டபம்
புடவை வாணிபம்

புளியம் பொக்க
நாகதம்பிரான்
ஆலய வருடா
பொங்கல் உற்ச
சிறப்புற
வாழ்த்துகின்றோ

இன்றே விரையுங்கள் உங்கள் குறைந்த
செலவில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள
369/6 தருமபுரம், பரந்தன்,கிளிநொச்சி
077 288 1184 , 077 323 9386
(C-5312)

அபி வாகன சுத்திகரிப்பு நிலைய

புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தினால் வருடாந்த
பொங்கல் உற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
பல ஆண்டுகளாக வாகன சுத்திகரிப்பு துறையில் பல
வாடிக்கையாளர்களின்
நன்மதிப்பைப் பெற்ற அபி வாகன சுத்திகரிப்பு நிலையம்
A35 வீதி, நெத்தலியாறு அம்மன்கோவில் அருகாமை,
தருமபுரம் (C-5313) 077 545 2538


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

க”

## ாகதம்பிரான் ஆலயத்தின்
## ர்- 01.04.2026

எட்டு நாளைக்கு முன்னதாக விளக்கு வைப்புடன் ஆரம்பமாகி பிரம்பு கொடுத்தல், பண்டம் செல்லுதல் போன்ற சம்பிரதாய நிகழ்வுகளுடன் மாட்டு வண்டில்களில் பிரம்பு, விபூதி, வேளைப் பெட்டி, நாகபடம் என்பவற்றுடன் புறப்பட்டு மீசாலை புத்தூர் சந்தி வரை சென்று பொங்கலுக்கான பொருட்களுடன் திரும்ப வந்து பொங்கி வழிபாடு செய்வது வழமையாக இருந்து வருகிறது.

ஒல்லாந்த நாட்டவர் இலங்கையை ஆண்ட காலத்தில் வழமை போன்று ஆலயத்தில் இருந்து பண்டம் புறப்பட்டு மீசாலைக்கு சென்று திரும்பி வரும் வழியில் கண்டாவளை மடுக்கரை என்ற இடத்தில் அன்னதானம், பூசை வழிபாட்டிற்காகத் தரித்து நின்றனர். அச் சமயம் அவ் வழியால் வந்த ஒல்லாந்த அதிகாரிகள் இதை அவதானித்து பூசகரை வரவழைத்து எங்களுடைய அனுமதி இல்லாமல் உங்கள் தெய்வங்களை வழிபடுவது சட்டப்படி குற்றம் என்று கூறினர். அப்போது பூசகர் எமது முன்னோர்களின் நடைமுறையையே நாமும் தொடர்ந்து செய்து வருகிறோம் என்று கூறினார்.

அப்போது அந்த அதிகாரி பூசகரைப் பார்த்து உங்கள் தெய்வம் என்ன என்று வினவ, அவர் பாம்புத் தெய்வம் என்று கூறினார். அதிகாரி மிகுந்த கோபம் கொண்டு உங்கள் தெய்வத்தை இப்பொழுது இங்கே காண்பிக்க வேண்டும். தவறினால் நீங்கள் தண்டனைக்கு ஆளாகுவீர்கள் என்று மிரட்டினான். அச் சமயம் பூசகர் மிகுந்த மன வேதனையுடன் எங்கள் தெய்வத்தை உங்கள் முன்னிலையில் காண்பிக்கிறேன் என்று சொல்லி அருகே இருந்த

அடிய வர்களின் உதவியுடன் புதிய பானை ஒன்றை எடுத்து எல்லோர் ஒன்றை முறுக்கி வைத்து விட்டு இறைவனை வணங்கி தோத்திரங்கள் வந்து காட்சி கொடுக்க வேண்டும் என்று மனமுருகி வேண்டி நின்றார். ப்பானையில் இருந்து ஐந்து தலை நாகபாம்பு வெளிப்பட்டது. அங்கு ல்லாந்த அதிகாரிகளும் தம்பிரான் தொண்டர்கள் போல் கரம் கூப்பி ரிகள் தவறை உணர்ந்து பூசகரிடம் வருத்தம் தெரிவித்து, தொடர்ந்து திற்கு சென்று பொங்கலை சிறப்பாக நடத்துங்கள் நாங்களும் வருவோம்

வுகளை நிறைவு செய்து கொண்டு கோயிலுக்கு வந்து பொங்கலை ந்த ஒல்லாந்த அதிகாரி பூசகரைப் பார்த்து பானைக்குள்ளிருந்து காட்சி ால் ஆன திருவுருவத்தை கொடுத்து ஆலயக்கட்டுமான நிதியாக ஒரு சென்றனர்.

தம்பிரான் ஆலயத்தின் நீதிநாயக முதலியாரின் வழித் தோன்றல்களில் நைவேத்தியமாக அரச மரத்தில் பால் பழம் வைத்து வருகின்றார்கள். ாடிக்கம் புதூரிலிருந்து அழைத்து வந்த இடைப்பட்ட ஒரு மாதகாலம் தப்பொங்கல் நாளன்று திறக்கப்பட்டு பூசைகள் நடைபெறும்.

நும், இராச கோபுரங்களும் தனித்தனியாக அமையப்பெற்றதுடன் மணி மகோற்சவமும் நடைபெற்று ஆடி அமாவாசை நாளன்று தீர்த்தத் அடியவர்களின் குறைதீர்க்கும் பெரும் ஆலயமாகத் திகழ்ந்து வருகின்றது.

**ாற்றுத் தொகுப்பு**
**, ஓய்வுநிலை உப அஞ்சல் அதிபர், புளியம்பொக்கணை.**

**த.புரட்சிதாசன், 2 ஆம் கட்டை முரசுமோட்டை.**

பதிந்த

386

அம்பிகை மரக்காலை
புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
அனைத்து வகையான மரதளபாடங்களை சிறந்த முறையில் செய்து தருகின்றார்கள்.
(C-5314)
இல- 372/07
முல்லை வீதி,தருமபுரம்.
077 074 0796

லஷ்மி சுவீட்ஸ்
புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
(C-5309)
எங்களிடம் வாருங்கள் குளிர்ச்சியாக செல்லுங்கள் அனைத்து வகையான கேக் வகைகள் வெளிநாட்டு சொக்கிலேற் வகைகள் மற்றும் அனைத்து வகையான குளிர்பானங்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
A35 வீதி,
நெத்தலியாறு, தருமபுரம்.
077 658 7148
076 043 4725

ையம்

சுந்தரம் வெற்றிலைக் கடை
புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
ஆலயத்திற்குத் தேவையான அபிஷேக பொருட்கள் மற்றும் ஏனைய கிரியைக்கான பொருட்களை பெற்றிட எம்மை நாடுங்கள்.
T.P-077 079 8909
(C-5311)
சந்தை உட்புறம்,
கொடிகாமம்

# வலுசக்தி அமைச்சர் பதவி விலக வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ வலியுறுத்து



(கொழும்பு)

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள வலுசக்தி அமைச்சர், எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளுக்காகக் காத்திருக்காமல் தானாகவே முன்வந்து பதவி விலக வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட நாமல் ராஜபக்ஷ, அரசாங்கமே முறைகேடுகளை ஒப்புக்கொண்டுள்ள நிலையில், பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டினார்.

குறைந்த விலையில் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டதாக அமைச்சர்கள் கூறினாலும், அதனால் ஏற்படும் நஷ்டத்தை இறுதியில் பொதுமக்களே சுமக்க வேண்டியிருக்கும் என அவர் எச்சரித்தார்.

ஆளுங்கட்சியுடன் தொடர்புடைய எவருக்கும் ஊழலில் தொடர்பில்லை என முன்னர் கூறப்பட்ட போதிலும், தற்போது வலுசக்தி அமைச்சர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அந்த கூற்றுகளுக்கு முரணாக அமைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நகர்வுகள் குறித்துப் பேசிய அவர், ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் புதிய தலைமைத்துவங்கள் உருவாவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

சஜித் பிரேமதாச, ரணில் விக்ரமசிங்க மற்றும் அநுர குமார திஸாநாயக்க ஆகியோரின் தலைமையிலான அரசியல் சக்திகள் நாட்டின் அரசியல் களத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மூத்த அரசியல் தலைவர்களை ஓரம் கட்டுவது தவறு எனத் தெரிவித்த அவர், இளம் தலைவர்கள் உருவாகுவதற்கு அனுபவம் வாய்ந்த தலைவர்களின் வழிகாட்டல் அவசியம்.

“கடந்த காலத் தவறுகளைத் திருத்திக்கொண்டு, நவீன மயமாக்கலுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும்,” என நாமல் ராஜபக்ஷ தனது உரையில் மேலும் சுட்டிக்காட்டினார். (நி)

# அதிக வெப்பம் காரணமாக காட்டுத் தீ பரவும் அபாயம்

## காடுகளை அண்டி இருப்பவர்களை அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

நாட்டில் நிலவும் வறண்ட வானிலை காரணமாக நாட்டின் பல மாவட்டங்களில் காட்டுத்தீ பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக பேரிடர் மேலாண்மை மையத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

எனவே காடுகளை அண்டிய பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள் மற்றும் அங்கு பயணம் செய்வோர் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

வறண்ட காற்று மற்றும் கடும் வெப்பம் நிலவும் சூழலில், மிகச் சிறிய தீப்பொறி பாரிய அளவிலான வனப்பகுதியை அழிக்கும் நிலை உள்ளமையினால் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தீப்பரவல்களைக் கட்டுப்படுத்த முப்படையினர், பொலிஸார் மற்றும் ஏனைய தரப்பினரின் ஒத்துழைப்புடன் பேரிடர் மேலாண்மை மையம் தொடர்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

எனவே தீப்பரவல்கள் அல்லது அவசர நிலைமைகள் குறித்து பொதுமக்கள் எந்த நேரத்திலும் 117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து மும்மொழிகளிலும் தகவல்களை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கை வளங்களைப் பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும் என்பதால், விழிப்புணர்வுடன் செயற்பட்டு அனர்த்தங்களைத் தவிர்க்க ஒத்துழைக்குமாறு அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)

# இலங்கைக்கு இந்தியா வழங்கிய ஆதரவு பிராந்திய கூட்டாண்மையின் பலம்

## பிரதி அமைச்சர் அருன் ஹேமச்சந்திரா



(கொழும்பு)

உலகளாவிய எரிசக்தி விநியோகச் சங்கிலிகள் நெருக்கடியில் இருக்கும் சந்தர்ப்பத்தில், இலங்கைக்கான எரிபொருளை இந்தியா விநியோகித்தமை யானது, பிராந்தியத்திற்குள் நிலவும் கூட்டாண்மை, நம்பிக்கை மற்றும் உடனடிப் பதிலளிப்பு ஆகியவற்றின் வலிமையை எடுத்துக்காட்டுவதாக பிரதி அமைச்சர் அருன் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

இந்தியாவை தளமாகக் கொண்டு செயல்படும் ஆங்கில தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய நிச்சயமற்ற காலகட்டத்தில் இலங்கைக்கு எரிபொருள் விநியோகம் தொடர்வதை உறுதி செய்வதில், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான இந்தியா வழங்கிய காலந்தவறாத ஆதரவை பாராட்டுவதாகவும் பிரதி அமைச்சர் கூறியதாக, குறித்த இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய கிழக்கு மோதலால் ஏற்பட்ட கடுமையான எரிபொருள் பற்றாக்குறையைத் தணிப்பதற்காக 38 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை இந்தியா அவசரகால உதவியாக வழங்கியது.

ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்க விடுத்த கோரிக்கையை ஏற்று, பிரதமர் மோடி எரிபொருள் விநியோகத்துக்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்.

இந்த இவசரகால உதவியானது, நெருக்கடிக்காலங்களில் இந்தியாவின் முக்கிய பிராந்திய ஆதரவை எடுத்துக் காட்டுவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# குவைத் நாட்டின் எண்ணெய்க் கப்பலை தாக்கிய ஈரானின் ட்ரோன்



(டெஹ்ரான்)

டுபாய் துறைமுகத்துக்கு அருகில் நங்கூரமிடப்பட்டிருந்த குவைத் நாட்டின் எண்ணெய்க் கப்பல் மீது ஈரான் நடத்திய ட்ரோன் தாக்குதலில் அக்கப்பல் தீக்கிரையாக்கப்பட்டு சேதமடைந்ததாக குவைத் பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளையில் "அல் சல்மி" என்ற குவைத்தின் மிகப் பெரிய மசகு எண்ணெய் கப்பலே தாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து, கப்பலில் இருந்த 24 பணியாளர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாகவும் எவருக்கும் காயமோ உயிர்ச்சேதமோ ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்கப்பட்ட வேளையில் முழு அளவு சரக்குடன் கப்பல் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ட்ரோன் தாக்குதலால் தீப்பற்றி எரிந்த கப்பலின் அடிப்பாகம் சேதமடைந்துள்ளது என்றும் இதனால் கப்பலில் எண்ணெய்க் கசிவு ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் குவைத் பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கப்பலில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக டுபாய் அதிகாரிகள் கூறுகின்றனர்.

சேதம் குறித்த விரிவான மதிப்பீடு நடைபெற்று வருகிறது. அத்துடன் கப்பலை பாதுகாக்கவும் சுற்றுச்சூழல் பாதிப்பை குறைக்கவும் உரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக அக் கூட்டுத்தாபனம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இந்த அல் சல்மி கப்பல் 2011இல் உருவாக்கப்பட்ட ஒரு எண்ணெய் தாங்கிக் கப்பலாகும். குவைத் நாட்டுக் கொடியுடன் பயணிக்கக்கூடிய இந்தக் கப்பலின் மொத்த நீளம் 333 மீற்றர், அகலம் 60 மீற்றராகும். (ஙி)

# புதிய கொவிட் திரிமான 'சிக்காடா' 23 நாடுகளில் பரவல்

(வோஷிங்டன்)

கொரோனா வைரஸின் உருமாறிய புதிய துணைத் திரிபான BA.3.2, தற்போது அமெரிக்கா உட்பட உலகின் 23 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. இதற்குப் பொதுவாக 'சிக்காடா' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தத் திரிபு அதன் அசாதாரணமான மரபணு மாற்றங்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியைத் தாண்டிப் பரவும் திறன் காரணமாக உலக சுகாதார ஸ்தாபனம் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.


நீண்டகாலத்திற்கு ஒரு முறை நிலத்திலிருந்து வெளியே வரும் "சிக்காடா" பூச்சிகளைப் போலவே, இந்த வைரஸும் நீண்டகாலம் கண்டறியப்படாமல் மறைந்திருந்து, திடீரென மீண்டும் வெளிப்பட்டதால் இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது முதன்முதலில் 2024ஆம் ஆண்டின் இறுதியில் தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டது.

அமெரிக்காவில் இதனுடன் தொடர்புடைய முதல் பாதிப்பு 2025 ஜூன் மாதம் பதிவாகியுள்ளது. ஆராய்ச்சியாளர்களைப் பொறுத்தவரை, இந்தத் திரிபு 70 முதல் 75 வரையிலான மரபணு மாற்றங்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக, மனித உடலுக்குள் வைரஸ் ஊடுருவ உதவும் 'ஸ்பைக் புரோட்டீன்' பகுதியில் மட்டும் 50இற்கும் மேற்பட்ட மாற்றங்கள் உள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளாக அமெரிக்காவில் ஆதிக்கம் செலுத்தி வந்த "JN.1" திரிபிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டதாகக் கருதப்படுகிறது.

இதுவரை கிடைத்துள்ள தரவுகளின்படி, "சிக்காடா" திரிபு தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்துவதாகத் தெரியவில்லை.

ஓமிக்ரான் வகையைப் போன்றே இதுவும் மென்மையான அறிகுறிகளையே கொண்டுள்ளது.


இருமல் மற்றும் தொண்டை வலி, சோர்வு மற்றும் உடல் வலி, மூக்கடைப்பு அல்லது மூக்கு ஒழுகுதல், மிதமான காய்ச்சல், அரிதாக வாசனை



மற்றும் சுவை இழப்பு, இரவு நேரங்களில் வியர்த்தல் போன்ற அறிகுறிகளைகொண்டுள்ளது.

இந்த வைரஸ் நோய் எதிர்ப்பு சக்தியைச் சற்றே ஏமாற்றும் திறன் கொண்டிருந்தாலும், தற்போதுள்ள தடுப்பூசிகள் தீவிரமான பாதிப்பு மற்றும் உயிரிழப்புகளிலிருந்து பாதுகாப்பை வழங்கும் என்று நிபுணர்கள் உறுதியளிக்கின்றனர். (ஙி)

# இஸ்ரேலில் புதிய சட்டம் நிறைவேற்றம் சர்வதேச ரீதியில் கிளம்பியுள்ள எதிர்ப்பு



(ஜெருசலேம்)

இஸ்ரேலியர்களைக் கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு, குற்றவாளிகளாகக் காணப்படும் பாலஸ்தீனர்களுக்கு மரண தண்டனை வழங்குவதற்கு அனுமதி அளிக்கும் புதிய சட்டமூலம் இஸ்ரேலிய பாராளுமன்றமான "க்னெசட்" நிறைவேற்றப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் தீவிர வலது சாரிக் கட்சியினரால் நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வந்த இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமையானது அவர்களுக்குக் கிடைத்துள்ள ஒரு முக்கிய வெற்றியாகக் கருதப்படுகிறது.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேரில் வருகை தந்து இந்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவாக "ஆம்" என வாக்களித்துள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலியர்களைக் கொலை செய்ததாகக் குற்றம் நிரூபிக்கப்படும் பாலஸ்தீனர்களுக்கு "தூக்குத் தண்டனை" வழங்குவதை இந்தச் சட்டம் கட்டாயமாக்கியுள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழ், இஸ்ரேலிய நீதிமன்றங்கள் தனது சொந்த நாட்டுப் பிரஜைகளுக்கும் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்க அதிகாரம் பெற்றுள்ளன.

இந்தச் சட்டம் ஏற்கனவே முடிவடைந்த வழக்குகளுக்குப் பொருந்தாது.

இனிவரும் காலங்களில் பதியப்படும் புதிய வழக்குகளுக்கு மட்டுமே இது நடைமுறைப்படுத்தப்படும்.

இந்தச் சட்டமானது இனவாதத் தன்மையுடையது என்றும், மிகவும் கொடூரமானது என்றும் இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீன மனித உரிமை அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

மேலும், இவ்வாறான தண்டனைகள் தாக்குதல்களைத் தடுக்க உதவாது எனவும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும்போது இஸ்ரேலிய உயர் நீதிமன்றத்தில் பல சட்ட ரீதியான சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஙி)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 150 | 200 | 150 | 90 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 | -- | 320 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 | 250 | 250 | 300 |
| தக்காளி | 120 | 100 | 100 | 100 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 150 | 250 | 200 | 200 | 120 |
| கோவா | 120 | 80 | 100 | 150 | 160 | 140 |
| கரட் | 250 | 440 | 250 | 450 | 400 | 360 |
| பூசணி | 120 | 140 | 100 | 150 | 100 | 80 |
| புடோல் | 150 | 150 | 100 | 150 | 150 | 70 |
| வாழைக்காய் | 150 | 140 | 100 | 200 | 100 | 110 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 | 200 | 220 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 200 | 200 | 180 | -- |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 250 | 300 | 140 |
| வெண்டக்காய் | 200 | 250 | 150 | 250 | 180 | 200 |
| கருணைக் கிழங்கு | 250 | 300 | 300 | 300 | -- | 250 |
| பயற்றங்காய் | 300 | 250 | 250 | 200 | 200 | 270 |
| லீக்ஸ் | 250 | 280 | 400 | 250 | 400 | 210 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 100 | 120 | 100 |
| கறிமிளகாய் | 150 | 120 | 200 | 150 | 150 | 150 |
| முருங்கைக்காய் | 2000 | 3000 | 2000 | 2000 | 2000 | -- |
| போஞ்சி | 300 | 300 | 300 | 500 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 150 | 150 | -- | -- |
| கீரை – 1 பிடி | 140 | 180-120 | 150 | 100 | -- | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 150 | 200 | 200 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 170 | 150 | 100-160 | -- | 120 |
| இராசவள்ளி | 450 | 450 | 350 | 350 | -- | 300 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 200 | 300 | -- | -- |
| முள்ளங்கி | 150 | 120 | 150 | 150 | 150 | 50 |
| பொன்னாங்காணி | 100 | 300 | 150 | 60 | -- | 50 |
| [illegible] | 60 | 70 | 100 | 80 | -- | 60 |
| [illegible] | 100 | 150 | 100 | 200 | -- | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் அழைப்பில் யாழ்ப்பாணம் மருத்துவ சங்கம் நடாத்தும் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

குறித்த இலவச மருத்துவ முகாமில் இரத்தப்பரிசோதனைகள், குருதி அமுக்கப் பரிசோதனைகள், உடல் திணிவுச் சுட்டி போன்ற பரிசோதனைகள் இடம்பெறும்.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

## கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கச்சாய் ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று புதன்கிழமை காலை 9.11 மணி முதல் 10.40 மணிவரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக நிகழ்வுகள் பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி.த.வீரபத்திரக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளன. (8-30)



யாழ்ப்பாணம் - நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் வருடாந்திர மகோற்சவ தேர்த் திருவிழா நேற்றைய தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:சிவசாந்தன்)



# 'ஈழத்து வித்துவம்' எங்கள் புலமை மரபின் அடையாளம் வித்துவசிரோமணி சி.கணேசையர் (1878-1958) 148ஆவது ஜனன தினம் இன்று

செந்தமிழ் நூல் கற்றார்
சொல்லுமந் நூற்பொருள்
தந்த வழி முறையிற்றான்
வாழ்ந்தார் - முந்து தமிழ்ச்
சங்கக்கபிலனே சான்ற
கணேசையர்க்குப்
பங்கமிலொப்பாவான் பார்

-புலவர் நா. சிவபாதசுந்தரனார்

எங்கள் தேசத்தின் புலமை அடையாளாய் நிமிர்ந்த வித்துவ சிரோமணி கணேசையர் அவர்களின் பிறந்த நாளை நினைவு கூரும் இத்தருணம் பெறுமதியானது.

இலக்கண, இலக்கிய ஆய்வாளராக, விவாத அறிஞராக, புலவராக தமிழ் கூறும் நல்லுலகெங்கணும் தடம் பதித்த ஆளுமை. தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், இலக்கண விளக்கம் முதலாய அரிய நூல்களை ஆழக்கற்று உரையும் நுண்ணிய விளக்கங்களும் தந்த பேராசான். ஈழநாட்டு தமிழ் புலவர் சரிதம் போன்ற அரிய பல நூல்களின் ஆசிரியர்.

அவர் வீற்றிருந்து அருளாட்சி புரிந்த வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் மருங்கிலே இதே காலப்பகுதியில் சிலையெடுத்துக் கொண்டாடினோம். சங்கம் வளர்த்த எங்கள் வர்த்தலைவிளான், கட்டுவன், தென்மயிலைக் கிராமங்களின் பண்பாடு எழுச்சியிலும் கல்வி மேம்பாட்டிலும் அவர் தந்த தலைமைத்துவம் நிகரிலாதது.

எங்ஙூர் என்ற எல்லைக்கு அப்பால் ஆரிய-திராவிட பாஷா விருத்திச்சங்க பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்திய அவரது ஆசிரியப்பணி மறக்க முடியாதது. காசிவாசி செந்திநாதையர், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், வடமொழி அறிஞர் பிச்சு வையர் போன்ற பெருமக்களிடம் பாடம் கேட்ட அவர் ஒரு பெரும் மாணவத் தலைமுறையை எமக்காக்கியவர்.

தமிழுக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் அவராற்றிய ஒப்பற்ற பணிகளை இன்றைய தலைமுறையினர் அறியச்செய்வது எம் காலக்கடமையாகும்.

எதிர்காலத்தில் ஐயாவின் ஆச்சிரமம் அமைந்த சூழமைவில் அவர் பெயரில் ஒரு தமிழியல் ஆய்வு நிறுவனம் அமைந்திடுதல் வேண்டும். கணேசையர் பதிப்பு என்ற முத்திரையுடன் வெளியான அவரது வாழ்நாள் ஆய்வுப் பொருண்மையான தொல்காப்பிய விளக்கங்கள், இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள், செந்தமிழ் முதலாய இதழ்களில் வெளிவந்த இலக்கிய ஆய்வு நுட்பங்கள் இந் நிறுவனத்தின் வழியாக இன்றைய தமிழியல் மாணவர்கள் வசப்பட வேண்டும். இந்தப் பெரும் பணியில் தமிழியல் ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்நாளில் உறுதி பூணுவோம்.

பேராசிரியர் கலாநிதி
என். சண்முகலிங்கன்


# இராசிபலன்

01.04.2026
பங்குனி 18, புதன்கிழமை
சதுர்த்தி முற்பகல் 7.29 மணிவரை

உத்தரம் பிற்பகல் 4.32 மணிவரை
சுப நேரம் 4.41-6.11 மணிவரை
இராகுகாலம் 12.11-1.41 மணிவரை
பங்குனி உத்தரம், பூரணை விரதம்


சந்திராஷ்டமம்:
அவிட்டம், சதயம்

வளவன்




மேஷம்

மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாட்டால் ஆர்வம் கூடும்.




கடகம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, உறவினர்கள் உங்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பர்.



துலாம்

நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்; வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.




மகரம்

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், உங்கவின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.




ரிஷபம்

பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.



சிம்மம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.



விருச்சிகம்

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், கௌரவமான நாள்.



கும்பம்

பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.



மிதுனம்

தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாகன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.



கன்னி

பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், கற்பனை மிகுதியான நாள்.



தனுசு

பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் கூடும், வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.



மீனம்

வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், போசன சுகமுண்டு.

உன்னை நேசிப்பது நாயாக இருந்தாலும் அதனை நீ நேசிப்பாயாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 1010





அதிகமாகப் பேசிப் பழக்கமில்லாதவனும், இளவரசரிடம் அளவிறந்த பக்தி கொண்டவனுமான தியாகவிடங்கரின் மகன் ஏன் என்றுகூடக் கேளாமல் படகைத் திருப்பிச் சூடாமணி விஹாரத்தை நோக்கிச் செலுத்தினான்.

வரும்போது ஆன நேரத்தைக் காட்டிலும் போகும் போது சிறிது குறைவாகவே நேரமாயிற்று. ஆனால் இளவரசருக்கோ ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகமாக இருந்து கொண்டிருந்தது. படகு விஹாரத்தை அடைந்த போது பொங்கி வந்த கடல் ஏறக்குறைய விஹாரம் முழுவதையும் சூழ்ந்து கொண்டிருந்தது. நீர் மட்டம் மேலே ஏறிக் கொண்டுமிருந்தது. ஈழநாட்டிலுள்ள விஹாரங்களைப் போல் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரம் அக்காலத்தில் அவ்வளவு கம்பீரமாகவோ உயரமாகவோ அமைந்திருக்கவில்லை. இன்னும் கொஞ்சம் தண்ணீர் மேலே ஏறினால் விஹாரத்தின் மண்டப சிகரம் கூட முழுகிவிடும் என்ற நிலைமை ஏற்பட்டிருந்தது.

இளவரசர் படகிலிருந்து தாவித் தண்ணீரில் முழுகாமலிருந்த ஒரு மண்டபத்தின் மேல் தளத்தில் குதித்தார். அங்குமிங்கும் பரபரப்புடன் ஓடினார். விஹாரத்தின் அடித்தளத்துக்கு அவர் போகாமல் மேல் மாடங்களில் ஒவ்வொரு பகுதியாகத் தேடிக் கொண்டு வந்தார். மேல் மாடங்களிலேயே சில இடங்களில் மார்பு அளவு தண்ணீரில் அவர் புகுந்து செல்ல வேண்டியதாயிருந்தது.

மேலும் மேலும் ஏமாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. கடைசியில் கௌதமபுத்தரின் உருவச் சிலை அமைந்திருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார். அந்தச் சிலையின் மார்பு அளவுக்குத் தண்ணீர் ஏறியிருந்தது. அங்கே இளவரசர் நின்று சுற்று முற்றும் பார்த்தார். தண்ணீரில் குனிந்தும் பார்த்தார். அவருடைய வாயிலிருந்து எழுந்த மகிழ்ச்சியும் வியப்பும் கலந்த 'ஆஹா!' ஒலி அவர் தேடி வந்ததை அடைந்து விட்டார் என்பதற்கு அறிகுறியாக இருந்தது.

ஆம் புத்தர் சிலையின் அடியில் தண்ணீருக்குள்ளே பகவானுடைய பத்ம சரணங்கள் இரண்டையும் இறுகக் கட்டிக் கொண்டு ஆச்சாரிய பிக்கு உட்கார்ந்து கொண்டிருந்தார். பொன்னியின் செல்வர் தண்ணீரில் முழுகிப் பிக்குவின் கரங்கள் இரண்டையும் சிலையிலிருந்து பலவந்தமாக விடுவித்து விட்டு அவரைத் தூக்கி எடுத்தார்.

தண்ணீருக்குள்ளே பிக்குவைத் தூக்குவது இலேசாக இருந்தது. தண்ணீருக்கு வெளியே வந்த பிறகு அவ்வளவு இலேசாக இல்லை. ஆஜானு பாகுவும், நல்ல பலிஷ்டருமான அந்த பிக்குவின் உடல் கனம் இளவரசரைத் திணறச் செய்தது.

"முருகய்யா! முருகய்யா!" என்று குரல் கொடுத்தார். "இதோ வந்தேன்!" என்று சொல்லிக் கொண்டே முருகய்யன் படகைக் கொண்டு வந்தான். பொன்னியின் செல்வர் ஆச்சாரிய பிக்குவைத் தூக்கிக் கொண்டு படகை நோக்கி விரைந்து சென்றார். அவருடைய கால்கள் தடுமாறின.

### 5ஆம் அத்தியாயம்
### "தாயைப் பிரிந்த கன்று"

இளவரசர் புத்த பிக்குவையும் தூக்கிக்கொண்டு முருகய்யன் கொண்டு வந்து நிறுத்திய படகிலே குதித்தார். அவர் குதித்த வேகத்தில் அந்தச் சிறிய படகு பேயாட்டம் ஆடியது. ஒரு கணம் கவிழ்ந்து விடும் போலவும் இருந்தது. முருகய்யன் மிகப் பிரயத்தனப்பட்டுப் படகு கவிழாமல் காப்பாற்றினான். "முருகையா! இனிமேல் படகை விடு! ஆனைமங்கலம் அரண்மனைக்கு விடு!" என்று பொன்னியின் செல்வர் உரத்த குரலில் கூவினார்.

(தொடரும்....)



# சிறுவர் அரங்கம்

## சாக்ஸின் தந்திரம்



அது ஒரு காலை நேரம். சூரியனின் கதிர்கள் பட்டு அந்தப் புல்வெளி பச்சைப்பசேல் என மின்னிக் கொண்டிருந்தது. அந்த அழகான புல்வெளியில் இரண்டு ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன.

அப்போது அந்தப் பக்கமாக பாக்ஸ், சாக்ஸ் என்ற பெயர் கொண்ட இரண்டு நரிகள் வந்து கொண்டிருந்தன. அவற்றில் ஒரு நரிக்கு புல்லை மேயும் ஆடுகளைப் பார்த்ததும் அவற்றை சாப்பிட வேண்டும் போலத் தோன்றியது. உடனே தனது ஆசையை உடன் இருந்த நரியிடம் சொன்னது.

"பாக்ஸ், எனக்கு அந்த ஆடுகளை சாப்பிட வேண்டும் எனத் தோன்றுகிறது." எனக்கூற, உடனே பாக்ஸ் "ஆமா சாக்ஸ், எனக்கும் அந்த ஆடுகளை சாப்பிட வேண்டும் என ஆசையாக இருக்கிறது. இப்ப என்ன பண்ணலாம்?" என்றது.

உடனே பாக்ஸ் யோசித்து "அவை இரண்டும் ரொம்ப பலசாலிகளாக இருக்கும் போல் தோன்றுகிறது. அவையுடன் நாம் சண்டையிட்டு ஜெயிக்க முடியும் என எனக்குத் தோன்றவில்லை. அதனால் ஏதாவது புத்திசாலித் தனமாக யோசித்துதான் அந்த ஆடுகளை கொல்ல வேண்டும்" என்றது. அதற்கு சாக்ஸ் "ஆமாம், நீ சொல்வது சரிதான் பாக்ஸ். நானும் யோசிக்கிறேன்" என்றது.

பாக்ஸும் சாக்ஸும் தீவிரமாக யோசித்தன. சற்று நேரத்தில் சாக்ஸுக்கு ஒரு யோசனை தோன்ற சாக்ஸ், பாக்ஸிடம் "நீ சொல்வது நல்ல யோசனையாக இருக்கிறது. வா ஆடுகளிடம் போய் பேசலாம்" என்றது.

பாக்ஸும் சாக்ஸும் அங்கிருந்து புறப்பட்டு ஆடுகளிடம் சென்றன. ஆடுகள் நரிகளை வரவேற்றன. நரிகள் இரண்டும் ஆடுகளிடம் பேச்சு கொடுத்து கடைசியில் பேச்சை திசை திருப்பும் வகையில் "உங்கள் இரண்டு பேரில் நீ தானே பலசாலி" என்று பாக்ஸ் ஓர் ஆட்டிடம் கேட்டது. அதற்கு ஆடு "எதற்கு கேட்கிறாய்?" என்றது ஒரு ஆடு.

அதற்கு பாக்ஸ் "இல்லை. என்னோட நண்பன் சாக்ஸ் உன்னைப் பார்த்தால் பலசாலியாகத் தெரியவில்லை. உன்னுடன் மேய்கிற அந்த ஆடுதான் பலசாலி போலத் தோன்றுகிறது என்று சொல்கிறான். ஆனால், நீதான் பலசாலி என்று நான் சொன்னேன். ஆனால், அவன் அதை ஏற்றுக் கொள்கிறான் இல்லை. அதனால் உன்னிடமே கேட்டு விடலாம் என்று கேட்கிறேன்" என்றது.

இந்த பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றொரு ஆட்டிற்கு கோபம் வந்து, "அதை விட நான் தான் பலசாலி, உன் நண்பன் சாக்ஸ் சொல்வதுதான் சரி" என்று கூறியது. இதைக் கேட்ட முதல் ஆடு கோபப்பட்டு, "என்னை விட நீ பலசாலி என்று நீயே எப்படி சொல்ல முடியும். உன்னைவிட நான் தான் பலசாலி" என்று கூற, இரண்டு ஆடுகளும் மாறிமாறிப் பேசி கடைசியில் சண்டையிட ஆரம்பித்தன.

சாதாரண பேச்சு ஆக்ரோஷமான சண்டையாக மாறியது. கடைசியில் ஓர் ஆடு இறந்து போனது. உடனே "பார்த்தாயா, நான்தான் பலசாலி" என்று உயிரோடு இருந்த ஆடு பெருமிதத்தோடு சொன்னது.

அதற்கு "ஆமாம்.. ஆமாம், நீ தான் பலசாலி, நாங்கள் இரண்டு பேருமே ஏற்றுக்கொள்கிறோம்" என்று பாக்ஸும் சாக்ஸும் கூறின. உயிரோடு இருந்த ஆடு. நரிகளின் புகழ்ச்சியில் மயங்கி அங்கிருந்து சந்தோஷமாய் புறப்பட்டுச் சென்றது.

சாக்ஸும் பாக்ஸும் சந்தோஷமாய் இறந்து போன அந்த ஆட்டை எந்தவித கஷ்டமும் இன்றி சாப்பிட ஆரம்பித்த போது, பாக்ஸ் "சாக்ஸ் உன்னோட யோசனை பிரமாதம். இனிமேல் இந்த யோசனையை வைத்து நாம் நிம்மதியா சாப்பிடலாம்" என்றது.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு.

– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச தமிழ் எம்.பிகளுக்கு ஓர் அவசர மடல்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அங்கம் பெற்றுள்ள தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அன்பு வணக்கம்.

ஏலவே இதுபோன்ற ஓர் அவசர மடலை எழுதியிருந்தோம். எனினும் அது தொடர்பில் எந்தவித முன்னேற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

உண்மையில் ஆளும் தரப்பில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றிருப்பது தமிழ் மக்களுக்குப் பலம்.

எனினும் அரச தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிலும் குறிப்பாக வட மாகாணத்தில் இருந்து தெரிவாகிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் மௌனமாகக் கடந்து போவதை உணர முடிகிறது.

சிலவேளைகளில் நீங்கள் கதைக்க விரும்புவதில்லையா? அல்லது நீங்கள் கதைப்பதை அரச தரப்பு விரும்பவில்லையா? என்பதுதான் புரியாமல் உள்ளது.

ஒரு காலத்தில் ஆளுந்தரப்புடன் சேர்ந்து மலையக மக்களின் அடிப்படைத் தேவைகளில் சிலவற்றை நிறைவேற்றியவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள். ஆனால் அவரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி என்பது அவரைத் தலைவராகக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஊடாகக் கிடைக்கப் பெற்றது.

ஆனால் உங்களின் நிலைமை அதுவன்று. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீது தமிழ் மக்கள் கொண்ட நம்பிக்கை காரணமாக, அவர் நிறுத்திய வேட்பாளர்களுக்கு தமிழ் மக்கள் வாக்களித்ததனூடு நீங்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியவர்கள் என்பது சகலரும் அறிந்த உண்மை. அதில் ஒன்றும் தவறுமில்லை.

ஆனால் உங்களுக்குக் கிடைத்த பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தக்கமுறையில் பயன்படுத்தி, தமிழ் மக்களுக்கு ஆற்றக்கூடிய பணிகளை நீங்கள் செய்ய வேண்டும்.

இருந்தும் நீங்கள் அதைச் செய்யவில்லை அல்லது செய்யத் தவறுகிறீர்கள் என்பதுதான் உண்மை.

ஒன்றை மட்டும் இங்கு நாம் ஆணித்தரமாகக் கூறமுடியும். அதாவது, அடுத்த பொதுத் தேர்தலில் நீங்கள் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தை அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி உங்களுக்குத் தரப்போவதில்லை.

அதேநேரம் அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்பதுதான் உங்களின் அடையாளமாக இருக்கப் போகிறதா? என்பதையும் நீங்களே தீர்மானிக்கப் போகிறீர்கள்.

உண்மை. வடபகுதி மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். அதில் போதைவஸ்து பாவனை, கட்டுமானத்துக்குத் தேவையான மணல் மண்ணைப் பெற முடியாத நிலைமை, பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளால் மக்கள் படும் இடைஞ்சல்கள் என ஏகப்பட்ட பிரச்சினைகள் இருந்தபோதிலும் இதுவிடயத்தில் நீங்கள் தனித்தும் ஒருமித்தும் கதைப்பதாகத் தெரியவில்லை.

தயவுசெய்து இருக்குமிடம் தெரியாமல் இருந்துவிட்டுப் போக நினைக்காதீர்கள். ஜனாதிபதியைச் சந்தியுங்கள். வடக்கின் நிலைவரங்களை எடுத்துக் கூறுங்கள். பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள். இதை நீங்கள் செய்வீர்களாயின், உங்களை ஜனாதிபதியும் அங்கீகரிப்பார். அது அடுத்த தேர்தலிலும் உங்களுக்கு வாய்ப்பைத் தரும். இதை சிந்தனைக்குட்படுத்துங்கள்.

# முறையான இடமாற்ற நடைமுறை தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படவுள்ளது

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

அரசாங்கத்தினால் முறையான இடமாற்ற நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுவருவதாக சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தம் குறித்து நேற்று (31) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதியளவில் சுமார் 6 ஆயிரம் வைத்தியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் இந்த முறையான இடமாற்றச் செயற்பாட்டின் மூலம் குறிப்பிட்ட சங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட பல வைத்தியர்களுக்கு நீதி கிடைத்து வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மே 10ஆம் திகதியாகும் போது சுமார் 6 ஆயிரம் வைத்தியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். இது பெப்ரவரி முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த 13 வருடங்களாக இவ்வாறான முறையான நடைமுறை ஒன்று இடம்பெறவில்லை. இடமாற்றச் சபைகளில் இருந்ததாகக் கூறிக்கொண்டு அந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் சில இடங்களில் 13 முதல் 17 வருடங்கள் வரை தங்கியிருந்தனர். கண் வைத்தியசாலையில் இருந்தவர்கள் தமக்குரிய தேசிய வைத்தியசாலைக்குச் செல்ல முடியாமல் வீதியைக் கடக்கக் கூடத் தயங்கினர். இவ்வாறான அனைத்து முறைகேடுகளையும் நிறுத்தி வருடாந்த இடமாற்ற நடைமுறையை நாம் முன்னெடுத்து வருகிறோம்.

இதனால் நீண்ட காலமாக அநீதிக்குள்ளாகியிருந்த பெரும்பான்மையான வைத்தியர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றுச்சபை உறுப்பினர்கள் மற்றும் அவர்களது மனைவிகளை தமக்கு விருப்பமான இடங்களில் பல வருடங்களாகத் தங்க வைத்திருந்தவர்களே இதனை எதிர்க்கின்றனர். எனவே இந்த இடமாற்ற நடைமுறை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றார். (ம-7)

## பணவீக்கம் அதிகரிப்பு

இலங்கையின் மார்ச் மாதத்திற்கான முதன்மை பணவீக்கம் அதிகரித்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையில் கடந்த பெப்ரவரி மாதம் 1.6 வீதமாகக் காணப்பட்ட ஒட்டுமொத்த பணவீக்க வீதம், மார்ச் மாதத்தில் 2.2 வீதமாக உயர்ந்துள்ளது.

பெப்ரவரி மாதம் 0.2 வீதமாக இருந்த உணவுப் பணவீக்கம், மார்ச் மாதத்தில் 0.7 வீதமாக அதிகரித்துள்ளது.

பெப்ரவரி மாதம் 2.3 வீதமாகக் காணப்பட்ட உணவு அல்லாத பணவீக்கம், மார்ச் மாதத்தில் 2.9 வீதமாக உயர்வடைந்துள்ளது. (ம-7)

## காலி ரயில் நிலையத்தில் பற்றி எரிந்த ரயில் பெட்டிகள்

காலி ரயில் நிலையத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில் பெட்டிகள் திடீரென தீப் பற்றி எரிந்ததில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐந்து ரயில் பெட்டிகளில் இரண்டு பெட்டிகளில் தீ விபத்து ஏற்பட்டது.

தகவல் அறிந்ததும் விரைந்து செயற்பட்ட காலி தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸார் ஏனைய மூன்று பெட்டிகளுக்கும் தீ பரவாமல் தடுத்து நிறுத்தினர்.

பெரும் போராட்டத்திற்குப் பின் தீ முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்து தற்செயலாக நடந்ததா? அல்லது திட்டமிட்ட சதிச் செயலா? என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. (ம-7)

## இலவச சுற்றுலா விசாக்களை வழங்கும் திட்டம் அமுல்

இலங்கையில் 39 நாடுகளின் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு 06 மாத காலத்திற்கு கட்டணமின்றி இலவச சுற்றுலா விசாக்களை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் சுற்றுலா தொழிலை மேம்படுத்தும் நோக்கத்தில் இலவச சுற்றுலா விசாக்களை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2025.07.21 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இலவச சுற்றுலா விசாக்களை வழங்குவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க சட்ட வரைவாளர் தயாரித்த வரைவு விதிமுறைகளை பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்குமாறு பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (ம-7)

## ஆழ்கடல் பகுதியில் போதைப்பொருளுடன் 6 சந்தேகநபர்கள் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு தென்மேற்கே உள்ள ஆழ்கடல் பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது போதைப்பொருள் அடங்கியுள்ளதாக சந்தேகிக்கப்படும் பொதிகளுடன் உள்நாட்டு பலநாள் மீன்பிடிப்படகு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த விசேட நடவடிக்கையின் போது படகுடன் சேர்த்து 6 சந்தேகநபர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகு மற்றும் 6 சந்தேகநபர்களும் மேலதிக விசாரணைகளுக்காகவும் சட்ட நடவடிக்கைகளுக்காகவும் தரைக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

தேசிய பாதுகாப்பிற்காக நாட்டைச் சூழவுள்ள கடல் வலயங்களை உள்ளடக்கிய வகையில் கடற்படையினர் முன்னெடுத்துவரும் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளின்போதே இந்தப் படகு கைப்பற்றப்பட்டுள்ளது. (ம-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாட்டியெடுக்கும் வெப்பநிலை: காலமாற்றத்தின் கோலம்

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்



**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

மார்ச் 21ஆம், 22ஆம் திகதிகள் முறையே உலக காடுகள் தினமும் உலக நீர் தினமும் கொண்டாடப்பட்டது. இவ்விரண்டு தினங்களிலும் மிக முக்கியமான செய்தி எமக்கு தரப்பட்டதை உணர்ந்தால் இவற்றின் தேவையை, கனதியை நாம் அறிந்து கொள்ளலாம். எமது வாழ்க்கைக்கு இன்றியமையாதது நீரும் சூழலும். இந்த சூழலை முனைப்புடன் எமக்காக ஏற்படுத்தித் தருவன வனங்களே. எமக்கான வசதி வாய்ப்புக்களை பெறவும் உணவுத் தேவைக்கான நிலத்தை தயார்ப்படுத்தவும் பல வகைகளில் வனங்கள் அழிக்கப்பட்டு வனாந்தரங்களாக ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இயற்கையின் செல்வச் செழிப்பினை வனங்களிலே காணலாம். பலவகை தாவரங்கள் இவற்றுடன் ஒன்றி வாழும் பலவகை உயிரினங்கள் அனைத்தும் சேர்ந்து ஒரு சமநிலையை பேணி தத்தமது சந்ததிகள் வாழ வழிசெய்திருக்கும் பாங்கினைப் பார்க்கும் போது ஆறறிவு மனிதனுக்கு இதுவேன் இன்னமும் தோணாது மமதை கொண்டு தம்மைத் தாமே அழித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

போட்டியும் பூசலும் நான் என்னும் மமதையும் மனித குலத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் காட்சிகளை தினமும் நாம் பார்க்கின்றோமே. ஒரு காலத்தில் எமது தேசத்தில் இவையனைத்தும் பரீட்சித்தும் பார்த்தென்ற போர்வையில் பலவுயிர்களை நாம் காவுகொண்டோம். ஆனால் இப்போது எம்மை அழித்தவர்களே அழிந்து கொண்டிருக்கின்ற அவலநிலையை பாருங்களேன்.

பராபவ வருடம் பல பலப் பரீட்சைகளின் காலகட்டத்தில் உதிக்க இருக்கின்றது. ஐரோப்பாவில் போர்மேகம் சூழ்ந்திருக்கும் இந்நேரத்தில் பலவகையான கணிப்பீடுகள், எதிர்வுகூறல்கள் மற்றும் சாஸ்திர பலன்கள், இவற்றுடன் விஞ்ஞான கணிப்பீடுகளும் விளக்கங்களும் என அனைத்தும் ஒருமித்து சொல்லும் செய்தியாக உலக அமைதியின்மை ஏற்பட்டிருக்கின்றது.

எறிகணைகளின் வானுயர்ந்து பறக்கும் விமானங்களின் போர் ஐரோப்பாவில் நடந்தாலும் எமது தேசத்திலும் அதனது விளைவு பாரதூரமானது. ஒவ்வொரு நாடும் தம்மை வீரப்படுத்திக் கொள்ளவும் துணிவுடன் பேசும் ஆற்றலும் தமது வலிமையை வெளிக்கொணர்ந்து பறைசாற்றிக் கொள்ளும். இவையெல்லாவற்றிற்கும் போர் என்றால் உள்ள பயம், பீதி என்பன நலிவடைந்து விட்டது.

இயற்கை தந்த வனவளத்தினை பாதுகாக்காமல் எமக்கு தேவையானவற்றை நாம் வலிந்தெடுத்து பயன்படுத்தி விட்டு மீண்டும் அதனை பாதுகாக்கும் எந்த முன்னெடுப்புக்களுமின்றி மேலும் மேலும் சுயநலம்மிக்கவர்களாக இருந்து விடுகின்றோம். எத்தனை ஆண்டுகாலத்திற்குப் பின்பு வளிமண்டல வெப்பநிலை என்றுமில்லாதவாறு எகிறியிருக்கின்றது. அனைத்து ஜீவராசிகளுக்கும் இந்த சுவாத்தியம் நிச்சயமாக பிரச்சினைகளை கொடுக்கப் போகின்றது.

வனவளத்தை பாதுகாக்கும், இன்னமும் விருத்தி செய்யும் செயற்பாடுகளை மக்களின் ஒத்துழைப்புடன் ஒவ்வொரு பகுதியிலும் முன்னெடுக்கவேண்டும். விவசாயத் துறையில் வேளாண் காடுகளை மேலும் உருவாக்குவதற்கான ஆக்கபூர்வமான செயற்றிட்டங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தல் அவசியம். அழிப்பது இலகு, உருவாக்குவது என்பது ஆண்டாண்டு காலத்திற்கானது. இருக்கின்ற பூமியை பாதுகாக்க துப்பில்லாமல் விஞ்ஞானம் வேற்றுக் கிரகங்களில் மனிதன் உயிர்வாழ்வதற்காக தடயங்களை, வாய்ப்புக்களை தேடியோடிக்கொண்டிருக்கின்றது. ஆகக்கூடியது எமது தேசத்தில் வனவளத்தை மேம்படுத்தும் வாய்ப்புக்களை தினமும் நாம் கடைப்பிடித்தால் நிச்சயமாக அதனால் மனிதன் தன்னை தற்காத்துக்கொள்ளவாவது வாய்ப்பிருக்கும்.

மறைந்த பாரத தேசத்து ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்களின் தீர்க்க தரிசனத்தின் உண்மைநிலையை நாம் தற்போது உணரக்கூடியதாயிருக்கின்றது அல்லவா. சீனாவும் இந்தியாவும் வனவளங்களின் பரப்பளவை தமது நாடுகளில் அதிகரித்து காட்டியிருக்கின்றன. சீனா செயற்கையாக வனங்களை உருவாக்கி வனவளத்தை பெருக்கியிருக்கின்றது. இந்தியா வேளாண் காடுகளை அதிகளவில் உருவாக்கி வனவளத்தை இன்னமும் மேம்படுத்தியிருக்கின்றது. அந்த வகையில் நாமும் அத்தகைய நடவடிக்கைகளுள் இறங்கியாக வேண்டும்.

எமது மனைகளில் வேளாண் காடுகளை ஒத்த பல்பயன்தரு பல்லாண்டு தாவரங்களை அதிகளவில் நடுகை செய்வதன் மூலம் எமக்கு தேவையான உணவினை பெறுவதோடு நாமும் இந்த முயற்சியில் எமது பங்களிப்பினையும் நல்கலாம். ஒரு மனைக்கு அவசியமாக தேவைப்படுகின்ற ஐந்து: தென்னை, கமுகு, இரு மா, ஐம்பு, ஒரு பலா, கொய்யா, நெல்லி, அன்னமுன்னா. விளிம்பி இவற்றுடன் வாழை, பப்பாசி, கொடித்தோடை, போன்றனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏனைய மரக்கறிப் பயிர்களை இருக்கின்ற இடவசதியை வைத்து நடுகை செய்தால் நமக்கு தேவையான அடிப்படை உணவை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறாக நாம் வளர்க்கும் போது நாமும் எமது மனைப்பொருளாதாரத்தை விருத்தி செய்வதுடன் வேளாண்காடுகளுக்கும் எமது பங்களிப்பை செய்யமுடியும். மதில் கட்டி நாம் பாதுகாப்பாக இருக்கின்றதை உறுதிசெய்தாலும் உயிர்வேலிகளையும் வைத்திருப்பதனை நாம் உறுதிசெய்து கொள்ளல் நல்லது. உயிர்வேலிகளில் பல மரங்கள், செடிகள், பயிர்கள், மூலிகை தாவரங்கள் என்பனவற்றை நடுகை செய்து நமக்கு தேவையான பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நீரின்றி உலகேது. நீருக்காக நாம் தவிக்கும் தவிப்பை இந்த உஷ்ணமான காலத்தில் உணரக்கூடியதாயிருக்கின்றது. உலகில் மூன்றில் இரண்டு பங்கு நீரை கொண்டிருந்தும் நாம் அருந்தக்கூடிய நீர் அருமையாகவே கிடைக்கின்றது. அதனால் நாம் நீரை வீணாக்காது பயன்படுத்த பழகிக்கொள்ள வேண்டும். உலகில் எதுவும் இனாமாக கிடைக்காது. அனைத்திற்கும் நாம் பணம் செலுத்த வேண்டும் என்பதனை புரிந்து கொண்டால் வீண் விரயஞ் செய்தனை நாம் இன்றோடு தவிர்த்துக் கொள்ளலாம். அதிகரித்த உஷ்ணத்தினால் தேகாரோக்கியம் பாதிக்கப்படும் நிலையில் மழை பெய்யாது விட்டால் இன்னும் உயரப்போகும் வெப்பநிலை தாவரங்களிலும் விலங்குகளிலும் மனிதர்களிலும் உயிரிழப்புக்களை ஏற்படுத்தி விடும்.

விவசாய செய்கையில் நீர்ப்பாய்ச்சுதல் அதிகரிக்கப்பட்டு பயிர்களை தக்கவைக்கும் நிலைமை எழுந்திருக்கின்றது. கிணறுகளில் குளங்களில் தேங்கியிருக்கும் நீரினளவு கணிசமானளவு குறைவடையும் போது பாரதூரமான நிலை எழ வாய்ப்புக்களுண்டு. வினைத்திறனான வகையில் நீரினை பயன்படுத்தும் வழிமுறைகளை அனைவரும் கடைப்பிடித்தால் இந்த இடரிலிருந்து நாம் எம்மை பாதுகாக்கும் வழியுண்டு.

வனவளத்தையும் நீரினையும் நாம் பாதுகாக்கும் வழிமுறைகளை பிரதேச சபைகள், மாநகர சபைகள், விவசாய கழகங்களூடாக முன்னெடுத்தல் நன்மை தரும். எமக்கிருக்கும் பொறுப்பை தட்டிக்கழிக்காது நாம் இவற்றை பாதுகாக்கும் அனைத்து வழிகளையும் கடைப்பிடித்தல் அவசியமாகின்றது.

நேரடியாக வெயிலில் நடமாடுவதை தவிர்க்க கூறியிருக்கும் மருத்துவ உலகம் அதிகளவிலான நீரருந்துவதை பரிந்துரைத்திருக்கின்றது. உடலிலிருந்து நீர் வெளியேறுவதை சமப்படுத்தும் வகையில் நீர் அருந்துவது கட்டாயமென அறிவிக்கப்பட்டிருக்கும் போது எம்மை முதலில் காப்பாற்றும் செயலில் நாம் ஈடுபடுவது புத்திசாலித்தனமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பெண்களுக்கு...

பெண்களுக்கு நீதி கோரி யாழ்ப்பாணம் நல்லூரில் நேற்றுப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஈழத்தமிழர் மகளிர் சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு மேம்பாட்டுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடரும் இன அழிப்பு நிகழ்ச்சி நிரலை எதிர்ப்போம், உரிமைக் காகவும் பாதுகாப்புக்காகவும் குரல் கொடுப்போம் போன்ற கருப்பொருளில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பாதுகாப்பு இல்லையா?, தமிழ்ப் பெண்களுக்கும் தமிழ் மண்ணுக்கும் விடுதலை வேண்டும், எமது நிலம் எமக்கு வேண்டும், மறக்கவும் மாட்டோம் மன்னிக்கவும் மாட்டோம், வேண்டும் வேண்டும் சர்வதேச நீதி வேண்டும், இராணுவத்தினரை உடனே வெளியேற்று போன்ற கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7)

## அனைத்து...

இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி அனைத்து வகையான வாகனங்களும் இன்று எரிபொருளைப் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடி நிலைமையைக் கருத்திற்கொண்டு வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் வாராந்த ஒதுக்கீட்டின் அடிப்படையில் எரிபொருள் அனுமதிப்பத்திரத்துக்கமைய எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கம் ஒற்றை இலக்கமாயின் (1,3,5,7,9) ஒற்றை இலக்க நாட்களிலும் இறுதி இலக்கம் இரட்டை இலக்கமாயின் (2,4,6,8,0) இரட்டை இலக்க நாட்களிலும் எரிபொருள் வழங்கப்படுகிறது. (ம-7)

## இணுவிலில்...

சேர்ந்த காசிப்பிள்ளை மதுருபாகன் (வயது-75) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் சந்நிதி ஆலயத்துக்குச் செல்வதாக வீட்டில் உள்ளவர்களிடம் கூறிச் சென்ற நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸார் மெலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## பருத்தித்துறை...

இதில் அல்வாய் வடக்கு கோயில் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி குலசிங்கம் (வயது-78) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60,104)

## உணவுப் பொருட்...

நள்ளிரவு முதல் பல உணவுப் பொருட்களின் விலைகள் உயர்த்தப்படும் என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணங்களைத் திருத்தியமைக்க அரசாங்கம் எடுத்த முடிவைத் தொடர்ந்து இந்த விலை உயர்வு அமுல்படுத்தப்படுகிறது.

அதன்படி ஃபிரைட் ரைஸ் மற்றும் கொத்து ரொட்டி ஆகியவற்றின் விலைகள் 30 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் சிற்றுண்டிகளின் விலை 10 ரூபாயினால் உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும் பால் தேநீர் மற்றும் பிளேன் ரீ ஆகியவற்றின் விலைகளும் 05 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மேலும் பாலின் விலையும் 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 25 இந்திய...

நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த சமயம் கடற்படையினரால் 25 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். அன்றுமுதல் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று மல்லாகம் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மேற்படி மீனவர்களுக்கு எதிராக இதுவரை குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவில்லை எனத் திணைக்களம் சார்பில் மன்றுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 25 மீனவர்களையும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. இதன்போது மேற்படி 12 மீனவர்களையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-7)

## யாழில்...

உயிரிழந்துள்ளார்.

இதில் கொக்குவிலைச் சேர்ந்த இராஜரட்ணம் கிருஸ்ணகுமார் (வயது-73) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற மாமியாரின் மரணச் சடங்கிற்கு வந்திருந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (30) மதியம் வீட்டில் மயங்கி விழுந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்புத் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## உயர்...

திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 1911க்கு அழைப்பதன் மூலமோ அல்லது பாடசாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்பு மற்றும் பெறுபேறுகள் கிளையின் தொலைபேசி இலக்கங்களான 0112-785922, 0112-784208, 0112-786616 மற்றும் 0112-784537 ஆகியவற்றின் மூலமோ பெற முடியும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நவம்பர் 10ஆம் திகதி ஆரம்பமான உயர்தரப் பரீட்சையின் சில பாடங்கள், டித்வா புயல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு ஜனவரி 12 முதல் 20 ஆம் திகதி வரை மீண்டும் நடத்தப்பட்டன. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2026.03.31
சீட்டிழுப்பு இலக்கம் 6150
Y 7 0 7 1 7 3
அத சம்பத Y 7 1 7 3
சீட்டிழுப்பு இலக்கம் 0725

சுப தவசக
திகதி 2026.03.31
சீட்டிழுப்பு இலக்கம் 0266
தனுசு 48 52 57
5957

தன நிதானய
திகதி - 2026.03.31
சீட்டிழுப்பு இலக்கம் - 2180
S 23 29 38 52 S

மெகா பவர்
திகதி 31/03/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2498
P 14 30 54 56 64

ஜய JAYA
திகதி 2026.03.31
சீட்டிழுப்பு இலக்கம் 0418
Q 7 0 7 1

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4392
சீட்டிழுப்பு திகதி 31.03.2026
Q 20 35 66 71

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.03.31
சீட்டிழுப்பு இலக்கம் 1459
மிதுனம் 04 06 21 22 மிதுனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
31.03.2026 வெற்றி வாரம் 0858
Z 0 4 0 3 0 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,233,027.60

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3124
சீட்டிழுப்பு திகதி 2026.03.31 தினம் செவ்வாய்க்கிழமை
16 22 64 72 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 112,778,780.80

சனிதா
திகதி 31.03.2026 வெற்றி வாரம் 5285
03 21 41 67 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000.00

சசிரி
வெற்றி வாரம் 954
சீட்டிழுப்பு திகதி 31.03.2026 செவ்வாய்க்கிழமை
24 25 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,941,560.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4836
சீட்டிழுப்பு திகதி 31.03.2026 தினம் செவ்வாய்க்கிழமை
02 35 47 58 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,368,693.20

லக்பதி
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 16 24 27 37 51
சீட்டிழுப்பு வாரம் 2300
31.03.2026 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.217,881,680.00

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2950
சீட்டிழுப்பு திகதி : 2026.03.31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,590,818.40
13 23 36 70 Z

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

# இந்தியன் செலக்ஷனின்

## மெகா சேல்!



- திருமணப்பட்டுச் சாறிகள்
- கொட்டன் சாறிகள்
- சல்வார்
- சல்வார் துணிகள்
- ரெடிமேட் சல்வார்கள்
- பார்ட்டி புறொக்
- டொப்
- கவுண்
- ஸ்கேட், ப்ளவுஸ்
- சேட், ரீ சேட்
- டெட்சீற்
- மொடர்ன் ரெஸ்
- வேஷ்டிகள்
- லெகீன்ஸ்
- லெஹங்கா
- சிறுவர்களுக்கான ஆடைகள்

– மற்றும் ஏராளமான ஆடைத் தெரிவுகள் –

இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்

காலம் : 01.04.2026 முதல் 13.04.2026 வரை

(வாரத்தில் 07 நாட்களிலும் வியாபாரம் நடைபெறும்)

(2199)

மாணவர் விசா / இலவச ஆலோசனை

## STUDY IN UK

## IELTS Academic General UKVI

Mrs S.Mayuri (BA Eng.Lit) அவர்களின்

Life Skills A1/A2

திருமணமாகி UK செல்பவர்களுக்கானது

நேரில் வரும்போது எம்வாயிலாக வெளிநாடுகளுக்கு சென்றவர்களை பார்வையிட முடியும்.

## WEC COLLEGE

பருத்தித்துறை வீதி ஆரியகுளம், யாழ்ப்பாணம்

(ARIYA HOSPITAL Building) (2196)

0779265447/ 0217200989

## தேவை

- மேற்பார்வையாளர் (ஆண், பெண்) (A/L படித்தவர்கள்)
- பொதியிடல்(பெண்கள்)
- மில் வேலை தெரிந்தவர்கள் (ஆண்கள், பெண்கள்)

தொடர்புகளுக்கு :

076 4400 816

(2200)

## மணமகள் தேவை

திருவோணம், 3 ம் பாதம் 3 இல் சூரியன், செவ்வாய், 1991 நவம்பரில் பிறந்த மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

077 407 9386

(7167)

## TECHNO WORLD

தொழில்நுட்ப கல்லூரி

A/L தொழில்நுட்பப் பிரிவு

புதிய பிரிவு ஆரம்பம்

A/L 2025 DAY CLASS

(இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குரியது)

ஆரம்பம் : 03.04.2026 (வெள்ளிக்கிழமை)

நேரம் : காலை 8.00 மணி

வெலிங்டன் சந்தி,
லிங்கம் கூல்பார் அருகாமை
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 017 5346

(C-5316)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378 | 076 097 3127


# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 02.03.2026 திங்கட்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் துரை இராசமணி

மண்ணில் 18.03.1947 | விண்ணில் 02.03.2026

மாசிப் பூர்வபக்ஷ சதுர்த்தசி நாளில்
விசுவாவசு ஆண்டின் விமல நேரத்தில்,
நேசம் மிகுந்த நெஞ்சினரைக் காத்திட
பரமானந்த வல்லி அம்மன் திருவடி சேர்ந்தார்
அமரர் இராசமணி துரை அவர்கள்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 01.04.2026 புதன்கிழமை காலை 11.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(2197)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org